
GODDependence
True freedom is being dependent on God
செய்தி மடல்

ஏப்ரல் | 2026



## ஒளிக்கு சாட்சி கொடுக்க வந்தவன்

தேவனால் அனுப்பப்பட்ட ஒரு மனுஷன் இருந்தான், அவன் பேர் யோவான். அவன் தன்னால் எல்லாரும் விசுவாசிக்கும்படி அந்த ஒளியைக்குறித்துச் சாட்சிகொடுக்க சாட்சியாக வந்தான். அவன் அந்த ஒளியல்ல, அந்த ஒளியைக்குறித்துச் சாட்சிகொடுக்க வந்தவனாயிருந்தான். (யோவான் 1:6-8)

யோவான் நற்செய்தி நூலின் முதல் அதிகாரத்தில் யோவான் ஸ்நானகனைப் பற்றிய ஒரு சிறிய அறிமுகத்தை அப்போஸ்தலனாகிய யோவான் தருகிறார். யோவான் தேவனால் அவனுக்குக் கொடுக்கப்பட்ட ஊழியம் மற்றும் நோக்கத்துடன் வந்தவனாக இருந்தான். அது ஒளியைக் குறித்து சாட்சிகொடுத்து அனைவரும் இயேசுவை விசுவாசிக்கச் செய்வதாகும். ஒளி மற்றும் ஒளியைச் குறித்த சாட்சி ஆகிய இவ்விரண்டுக்குமான வித்தியாசத்தை யோவான் உடனடியாக குறிப்பிடுவதை நாம் இந்த வேதபகுதியில் காண்கிறோம். யோவான் ஸ்நானகனின் ஊழிய நோக்கம் என்னவெனில், ஒளியாக இருப்பது அல்ல, மாறாக அந்த ஒளிக்கு சாட்சி கொடுப்பது ஆகும்.

இந்த வேத பகுதியில் “ஒளி” என்பது மனிதர்களுக்கு ஜீவனையும் சத்தியத்தையும் இரட்சிப்பையும் தரும்படி தேவன் வெளிப்படுத்தின இயேசு கிறிஸ்துவைக் குறிக்கிறது.யோவான் ஸ்நானகனின் ஊழியமானது அந்த ஒளிக்கு ஜனங்களை ஆயத்தப்படுத்தி அதற்கு சாட்சி கொடுப்பது ஆகும். ஜனங்கள் தன்னைப் பார்க்காமல் கிறிஸ்துவைப் பார்த்து அவரிடம் திரும்பும்படி தேவனால் நியமிக்கப்பட்ட சாட்சியாக யோவான் இருந்தார். நாம் கவனிக்கவேண்டிய முக்கியமான விஷயம் என்னவெனில், யோவானின் மகத்துவம் அவர் யார் என்பதில் அல்ல, இல்லை, அவரது ஊழிய நோக்கத்தின் தெளிவில் இருக்கிறது.


தேவனும் பரிசுத்த வேதாகமமுமின்றி முழு உலகத்தையும் சரியாக ஆளுகைச் செய்வது சாத்தியமில்லை. – ஜார்ஜ் வாஷிங்டன்

"அவன் அந்த ஒளியல்ல" என்று இந்த வேத பகுதி அழுத்தமாகச் சொல்கிறது. இது தவறான புரிதல் எதுவும் உண்டாகாதபடி அல்லது தவறான இடத்தில் அல்லது மனிதரிடத்தில் பக்தியை வைத்துவிடாதபடிக்கு கவனமாக திருத்துகிறதாக இச்சொற்றொடர் இருக்கிறது. நம்பிக்கை மற்றும் விடுதலையை அனேகர் தேடிய அந்த காலத்தில், அவர்கள் தன்னை நோக்கி வரும்படி யோவான் செய்திருக்கமுடியும். ஆனால் அவர் அப்படி செய்யவில்லை. மாறாக, அவர் எப்போதும் மக்களின் கவனத்தை இயேசுவை நோக்கித் திருப்பினார். அவருடைய தாழ்மையும் கீழ்ப்படியும் மனமும் கிறிஸ்தவ சாட்சியின் உண்மையான இயல்பை வெளிப்படுத்துகின்றன–அது என்னவெனில், ஒளியாக இருப்பது அல்ல, ஒளியை பிரதிபலிப்பதே.

மேலும், இந்த சாட்சியின் நோக்கம் இந்த வேதபகுதியில் தெளிவாகக் கூறப்பட்டுருக்கிறது: அது அவன் மூலமாக "எல்லாரும் விசுவாசிக்கும்படி" செய்வதாகும். சாட்சி கொடுத்தல் என்பது வெறுமனே பேசுவது மட்டுமல்ல, அது மற்றவர்களை விசுவாசத்திற்குள் வழிநடத்துவதற்கான தெய்வீக அழைப்பு ஆகும். தேவன் மனிதர்களைத் தனது சத்தியத்தை வெளிப்படுத்தும் கருவிகளாக மனிதர்களைப் பயன்படுத்துகிறார் என்பதை யோவானின் வாழ்க்கை நமக்கு நினைவூட்டுகிறது, எனினும், வல்லமையும் மகிமையும் கிறிஸ்துவுக்கே உரியது என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

தேவன் நம் ஒவ்வொருவருக்கும் ஒரு ஊழியப் பணியையும் நோக்கத்தையும் வைத்திருக்கிறார். நம் வாழ்வின் நோக்கம் என்ன என்பதைப் பற்றி சிந்திக்கவும், தேவனுடைய வார்த்தையின் வெளிச்சத்தின் அதை மதிப்பிடவும் யோவான் 1:6-8 நமக்கு முன் ஒரு சவாலை வைக்கிறது. நாம் மற்றவர்களை கிறிஸ்துவை நோக்கித் திருப்புகிறோமா, அல்லது நம்மையே முன்னிலைப்படுத்துகிறோமா? உண்மையான சாட்சியானது தாழ்மை, தெளிவு, மற்றும் தேவனுக்கு உண்மையுள்ளவர்களாக இருத்தல் ஆகியவற்றை உடையதாக இருக்கவேண்டும். யோவான் ஸ்நானகன் செய்தது போல, நாம் எழும்பிப் பிரகாசிக்க அழைக்கப்பட்டிருக்கிறோம், நாம் ஒளியாக இருக்கும்படி அல்ல, மாறாக இந்த உலகத்தில் ஒளியாக இருப்பவரை நாம் பிரதிபலித்து பிரகாசிக்கும்படி அழைக்கப்பட்டிருக்கிறோம்.

**உங்கள் சாட்சி என்ன?**

-சகோ. அற்புதராஜ் சாமுவேல், பெங்களூரு.

## வாசகர் வாய்ஸ்

**சகோதரி. காயத்ரி** ★★★★★

"இந்த மாதத்திற்கான செய்திமடலை எனக்கு அனுப்பித் தாருங்கள்."

**சகோ. டேனியல்.** ★★★★★

"இந்த மாதத்திற்கான செய்திமடலை பெற்றுக்கொள்ள காத்திருக்கிறேன்."

இந்த ஏப்ரல் *2026* மாத செய்திமடல்கள் வெளியிடுவதில் ஏற்பட்ட தாமதத்திற்கு வருந்துகிறோம்.

**- ஆசிரியர் குழு**

இறுதியில், மாற்றப்பட்ட வாழ்க்கையும், இயேசுகிறிஸ்துவுடனான ஆழமான மற்றும் நிலையான உறவுமே தனிப்பட்ட வேத ஆராய்ச்சியின் குறிக்கோள் ஆகும். - கே ஆர்தர்

# ஆசிரியரிடமிருந்து....

**கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான சகோதர சகோதரிகளே,**

நமது ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்கள் அனைவருக்கும் GODependence குழுவின் சார்பில் எனது அன்பின் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். இந்த செய்திமடல் மூலம் மீண்டும் உங்களுடன் தொடர்பு கொள்ளவும் தேவன் கொடுத்த இந்த வாய்ப்பிற்காக அவருக்கு நன்றி செலுத்துகிறேன்.

இந்த வருத்தின் லெந்துகாலத்தை நம்மில் பலரும் சிறப்பாக அனுசரித்திருப்போம் என நம்புகிறேன். வேத வாசிப்பு, உபவாசம், ஜெபம், மனந்திரும்புதல், தான தருமம் என பலருக்கும் பலவிதமாக அது அமைந்திருக்கும். நமக்காக பாடு மரணத்தை அனுபவித்த இயேசுகிறிஸ்து உயிர்த்தெழுந்து இன்றும் உயிரோடிருக்கிறார் என்ற விசுவாசம் நமது வாழ்க்கைப் பாதையில் நம்மை வழிநடத்துகிறது. 1 கொரிந்தியர் 15:17 ல் ”கிறிஸ்து எழுந்திராவிட்டால், உங்கள் விசுவாசம் வீணாயிருக்கும், நீங்கள் இன்னும் உங்கள் பாவங்களில் இருப்பீர்கள்.” என்று பவுல் கூறுவது நம்மை ஒரு நம்பிக்கையாகவும் ஒரு சவாலாகவும் அமைந்திருக்கிறது.

### 1) கிறிஸ்து எழுந்திருக்க வில்லையா?

கிறிஸ்து உயிர்த்தெழவில்லை என்று சொல்வது வரலாற்றுஉண்மைகளுக்கு முரணானது. புதிய ஏற்பாட்டில் அப்போஸ்தலராகிய பவுல் 1 கொரிந்தியர் 15:3-8-ல் மிக முக்கியமான ஆதாரத்தைத் தருகிறார்: “முதலாவதாக, வேதவாக்கியங்களின் படியே கிறிஸ்து நம்முடைய பாவங்களுக்காக மரித்தார், அடக்கம் செய்யப்பட்டார், மூன்றாம் நாளிலே வேதவாக்கியங்களின்படியே உயிர்த்தெழுந்தார், கேபாவுக்கும், பின்பு பன்னிருவருக்கும் தரிசனமானார்.” இதற்கும் மேலாக, ஒரே சமயத்தில் ஐந்நூற்றுக்கும் மேற்பட்ட சகோதரர்களுக்கும் தரிசனமானார் என்று பவுல் சாட்சி கூறுகிறார். இந்தச் சாட்சிகளில் பெரும்பாலோர் பவுல் எழுதும் காலத்தில் (கி.பி. 55) உயிருடன் இருந்தனர், எனவே இது பொய் என்றால் அவர்கள் அதை மறுத்திருக்க முடியும். வெறும் பக்தி மயக்கம் அல்லது மாயை இவ்வளவு பெரும் எண்ணிக்கையிலான மக்களுக்கு ஒரே நேரத்தில் தோன்றியிருக்க முடியாது.

இயேசு கிறிஸ்துவின் வெறுமையான கல்லறை, சீஷர்களின் அதிரடியான மாற்றம், மற்றும் பவுலின் சொந்த மனமாற்றம் ஆகியவை இதற்கு மேலும் வலுவான ஆதாரங்கள் எனலாம். இயேசுவைக் கைது செய்தபோது பயந்து ஓடிப்போன சீஷர்கள், அவர் உயிர்த்தெழுந்ததைக் கண்டபின், மரணத்தை முன்னிட்டும் அஞ்சாமல் பிரசங்கித்தனர். பேதுருவும் யாக்கோபும் கொல்லப்பட்டனர், தோமா இந்தியா வரை வந்து இரத்தசாட்சியானார். பவுல் (சவுல்) கிறிஸ்தவர்களைத் துன்புறுத்தியவராக இருந்தவர், தமஸ்கு வழியில் உயிர்த்தெழுந்த கிறிஸ்துவைச் சந்தித்தபின், தன் வாழ்நாள் முழுவதையும் சுவிசேஷத்திற்காக அர்ப்பணித்தார். இவையனைத்தும் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் உறுதியான வரலாற்று உண்மை என்பதை நிரூபிக்கின்றன.

தேவனுடைய வார்த்தைகளை நாம் நினைவில் கொள்ள வேண்டும். தேவனுடைய வார்த்தைகளைத் திரும்பத் திரும்பச் சொல்லுங்கள். தேவனுடைய வார்த்தைகளை முழு மனதுடன் விசுவாசியுங்கள். - லிசா டெர்கர்ஸ்ட்

## 2) விசுவாசம் வீணாய் இருக்கவில்லை

கிறிஸ்து உயிர்த்தெழுந்ததாலேயே, அவரில் வைக்கும் விசுவாசம் வீணாகவில்லை. முதல் நூற்றாண்டில் எருசலேமில் சுமார் 120 பேருடன் ஒரு சிறு கூட்டமாகத் தொடங்கிய திருச்சபை ( அப். 1:15), பெந்தெகொஸ்தே நாளில் 3,000 பேர் மனமாற்றம் அடைந்ததாக அப்போஸ்தலர் 2:41 கூறுகிறது. விரைவில் அது 5,000 ஆகவும் (அப். 4:4), பின்னர் எருசலேம் முழுவதும், யூதேயா, சமாரியா, மற்றும் புறஜாதிகளின் பகுதிகளுக்கும் பரவியது. ரோமப் பேரரசின் கொடிய துன்புறுத்தல்கள் இருந்தபோதிலும், திருச்சபை வளர்ந்தது.

இரண்டாம் நூற்றாண்டு முதல் நான்காம் நூற்றாண்டு வரை, திருச்சபை கோட்பாட்டு ரீதியாகவும் நிறுவன ரீதியாகவும் வளர்ந்தது. நைசியா சங்கம் (கி.பி. 325), கான்ஸ்டன்டிநோபில் சங்கம் (381) போன்றவை உயிர்த்தெழுதலை மையமாகக் கொண்டு திரித்துவக் கோட்பாட்டையும் கிறிஸ்துவின் தெய்வீகத்தையும் உறுதிப்படுத்தின. மத்திய காலத்தில், ஆகஸ்தீன், அக்குவினாஸ் போன்ற இறையியலாளர்கள் உயிர்த்தெழுதலை விளக்கினர். சீர்திருத்தக் காலத்தில் லூதர், கால்வின் போன்றோர் ‘உயிர்த்தெழுதல் இல்லையென்றால் விசுவாசம் வீண்’ என்ற பவுலின் வார்த்தையை மையமாகக் கொண்டு சுவிசேஷத்தை மீண்டும் உறுதிப்படுத்தினர். இன்று, கிட்டத்தட்ட 2.5 பில்லியன் கிறிஸ்தவர்கள் உலகில் உள்ளனர். கல்வி, மருத்துவம், அனாதை இல்லங்கள், முதியோர் இல்லங்கள், கல்வி நிறுவனங்கள் என்று திருச்சபை உலகுக்குச் செய்துள்ள சேவைகள் அளப்பரியவை. இவையனைத்தும் உயிர்த்தெழுந்த கிறிஸ்துவின் மீதுள்ள விசுவாசம் வீண் போகவில்லை என்பதற்கான சாட்சிகளாகும்.

## 3) நாம் இன்னும் பாவங்களில் இருக்கிறோமா?

கிறிஸ்து எழுந்திராவிட்டால், நாம் இன்னும் பாவங்களில் இருப்போம். ஆனால், கிறிஸ்து உயிர்த்தெழுந்ததால், நாம் பாவங்களில் இருந்து விடுதலை பெற்றுள்ளோம். ரோமர் 6:3-4-ல் பவுல் விளக்குகிறார்: “கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா? மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டதுபோல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்துகொள்ளும்படிக்கு, அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்-நானத்தினாலே கிறிஸ்துவுடனேகூட அடக்கம்பண்ணப்பட்டோம்.” ஞானஸ்நானம் என்பது பழைய மனிதன் பாவத்துடன் மரிப்பதற்கும், புதிய மனிதன் கிறிஸ்துவோடு எழுந்திருப்பதற்கும் அடையாளம். நாம் பாவமற்றவர்களாக மாறுவதில்லை, ஆனால் பாவத்தின் அடிமைகளாக இல்லை (ரோமர் 6:6).

ஆயினும், “நாம் இன்னும் பாவங்களில் இருக்கிறோமா?” என்ற கேள்விக்கு நாம் நம்மை இரண்டு கோணங்களில் ஆராய்ந்து பார்க்க வேண்டும். ஒன்று: நம்முடைய நிலை (position) - கிறிஸ்துவின் இரத்தத்தால் நாம் நீதிமான்களாக்கப்பட்டோம், பாவத்திற்கு மரித்தோம் (ரோமர் 6:2). இரண்டு: நம்முடைய நடைமுறை (practice) - நாம் இன்னும் இந்த பாவ உலகில் வாழ்கிறபடியால், பாவத்தின் சோதனைகளை எதிர்கொள்கிறோம். ஆனால், பரிசுத்த ஆவியானவர் நமக்கு உதவுகிறார், பாவத்தைச் சுட்டிக்காட்டுகிறார், மனந்திரும்புதலுக்கு வழிநடத்துகிறார். “நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், அவர் பாவங்களை மன்னித்து, எல்லா அநீதிகளிலும் நம்மைச்

பரிசுத்த வேதாகமம் வாழ்வதற்கு மிகச் சிறப்பான வழிமுறையையும், பாடுபடுதலின் மேன்மையான வழியையும், மரித்தலின் மிகவும் எளிதான வழியையும் நமக்குப் போதிக்கிறது. - ஃப்ளவல்

சுத்திகரிப்பதற்கு உண்மையும் நீதியுமுள்ளவராயிருக்கிறார்." (1 யோவான் 1:9) எனவே "அப்படியே நீங்களும், உங்களைப் பாவத்திற்கு மரித்தவர்களாகவும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்குள் தேவனுக்கென்று பிழைத்திருக்கிற வர்களாகவும் எண்ணிக் கொள்ளுங்கள். (ரோமர் 6:11) என்பதை மனதில் கொண்டு நடக்க வேண்டும்.

கிறிஸ்து உயிர்த்தெழுந்தார் என்பது வரலாற்று உண்மை. அதனால் நம் விசுவாசம் வீணல்ல, உலகம் முழுவதும் திருச்சபை வளர்ந்துள்ளது. நாம் இனியும் பாவங்களில் இருக்க வேண்டியதில்லை. மாறாக, கிறிஸ்துவில் புதிய சிருஷ்டியான அனுபவத்திற்குள் தொடந்து முன்னேற ஆண்டவர் தாமே நமக்கு உதவி செய்வாராக.

மார்ச் 20 இல் முடிவடைந்த இரமலான் காலத்தில் 30 நாட்களில் முழு வேதாகமத்தையும் வாசித்து முடிக்கும் சவால்களில் 11 பேரும், ஏப்ரல் 5 ல் முடிவடைந்த லெந்து காலத்தில் 40 நாட்களில் முழு வேதாகமத்தையும் வாசித்து முடிக்கும் வேத வாசிப்பு சவால்களில் 116 நபர்களும் பரிசுத்த வேதாகமத்தை முழுமையாக வாசித்து முடித்தனர்.

மார்ச் 29 அன்று நடைபெற்ற "கிறிஸ்துவின் சிலுவை மரணமும் உயிர்த்தெழுதலும் - ஒரு மருத்துவப் பார்வை" என்ற தலைப்பில் நடைபெற்ற கருத்தரங்கில் (Talk Show) கலந்துகொண்டு பயன்பெற்றவர்களுக்காக தேவனுக்கு நன்றி செலுத்துகிறோம். மார்ச் 28 அன்று மலையாள மொழியில் நடைபெற்ற 4 மணிநேர தொடர் வேதவாசிப்பு (Bible Readathon) நிகழ்ச்சியிலும் அநேகர் உற்சாமாக கலந்து கொண்டனர். மாதந்தோறும் இத்தகைய கருத்தரங்குகளும் நேரலை வேதவாசிப்பு நிகழ்ச்சிகளும் தடையின்றி நடைபெறவும் அதன் மூலம் அனேகர் பயன்பெறவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

வரும் நாட்களில் வேத தியான (Bible Meditation) குழுக்கள் மீண்டும் ஆரம்பிக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் தடையில்லாமல் முன்னெடுக்கப்பட ஜெபித்துக் கொள்ளுங்கள்.

GODependence ஊழியங்களுக்காக தொடர்ந்து ஜெபியுங்கள். இதன் சேவைகளை மற்றவர்களுக்கும் அறிமுகப்படுத்துங்கள். கர்த்தருடைய நாமம் மகிமைப்படுவதாக.

**கிறிஸ்துவின் பணியில்,**
**Dr. பேதுரு தேவதாசன்.**



## வாசகர் வாய்ஸ்

இந்த செய்திமடலின் உள்ளடக்கங்களைச் சார்ந்த உங்கள் கருத்துக்கள், பின்னூட்டங்கள், சாட்சிகள் மற்றும் கேள்விகளை எங்களுடன் பகிர்ந்து கொள்ளுமாறு வாசகர்களை அன்புடன் அழைக்கிறோம்.

தேர்ந்தெடுக்கப்படும் பதிவுகள் ஒவ்வொரு மாதமும் GODependence செய்திமடலின் வாசகர் வாய்ஸ் பகுதியில் வெளியிடப்படும்.

உங்கள் வாய்ஸ் மிகவும் முக்கியமானது. ஒவ்வொரு மாதமும் உங்களிடமிருந்து கேட்க ஆவலுடன் எதிர் நோக்குகிறோம். +965 6596 2559

தேவனுடைய வார்த்தையானது இயற்கைக்கு அப்பாற்பட்ட வல்லமை உடையதாக இருக்கிறது. அதனுடன் ஆயிரம் கோடி ரூபாய் பட்ஜெட் போட்டி போட முடியாது. - ஜோசப் ஸ்டோவெல்

# துதி மற்றும் ஜெபக் குறிப்புகள் - ஏப்ரல் 2026

## துதிப்போம்:

- 2026 மார்ச் மாதத்தில் தங்களின் வேதவாசிப்பை முழுமையாக நிறைவு செய்தவர்களுக்காகவும், ரம்ஜான் மற்றும் லெந்துகால வேதவாசிப்பை வெற்றிகரமாக நிறைவு செய்தவர்களுக்காகவும் தேவனைத் துதிப்போம்.
- 2026 மார்ச் 29 அன்று தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் 'கிறிஸ்துவின் சிலுவை மரணமும் உயிர்த்தெழுதலும் - ஒரு மருத்துவப் பார்வை' என்ற தலைப்பில் நடைபெற்ற GODependence கருத்தரங்கு சிறப்பாக நடைபெற்றதற்காகவும், அது அநேகருக்குப் பயனுள்ளதாக அமைந்ததற்காகவும் நன்றி செலுத்துவோம்.
- 12 மற்றும் 10 ஆம் வகுப்பு பொதுத்தேர்வுகளை நம்முடைய பிள்ளைகள் நல்லமுறையில் எழுதி முடிக்க ஆண்டவர் உதவியதற்காக அவருக்கு நன்றி செலுத்துவோம்..
- 2026 ஏப்ரல் மாத வேதவாசிப்பு குழுக்களை எந்தத் தடையும் இன்றி ஆரம்பிக்க இதுவரை ஆண்டவர் உதவியதற்காக அவருக்கு நன்றி செலுத்துவோம்.
- 2026 மார்ச் 28-ம் தேதி அன்று நடைபெற்ற Malayalam Bible Readathon ல் கலந்து கொண்டு வேதத்தை உற்சாகமாய் வாசித்த ஒவ்வொருவருக்காகவும் தேவனுக்கு நன்றி செலுத்துவோம்.

## ஜெபிப்போம்:

- 2026 ஏப்ரல் மாத வேதவாசிப்பு குழுக்களில் இணைந்துள்ளவர்கள் தாங்கள் முன்னெடுத்துள்ள சவால்களை வெற்றிகரமாக முடிக்க ஆண்டவர் உதவ ஜெபிப்போம்.
- வருகின்ற நாட்களில் நடைபெறவிருக்கும் NEET, JEE மற்றும் பிற போட்டித் தேர்வுகளுக்காகத் தங்களை ஆயத்தப்படுத்திக்கொண்டிருக்கும் நம்முடைய பிள்ளைகளுக்காகவும் அவர்கள் அத்தேர்வுகளில் வெற்றிபெற்று, தங்களுக்கான மேற்படிப்பை ஜெபத்துடன் தேர்வு செய்யவும் மன்றாடுவோம்.
- 2026 ஏப்ரல் மாதத்திற்கான GODependence கருத்தரங்கு மற்றும் தொடர் வேதவாசிப்பு நிகழ்வுகள் ஆண்டவரை மகிமைப்படுத்துவதாகவும், அநேகருக்குப் பிரயோஜனமானதாகவும் அமைய வேண்டுமென ஜெபிப்போம்.
- GODependence ஊழியங்களில் ஈடுபடுகிறவர்களுக்கு வேண்டிய ஞானத்திற்காகவும், வேதவாசிப்பு சவால்களுக்குப் பயன்படுத்தப்படுகிற GODependence-ன் 3 WhatsApp எண்களும் தொடர்ந்து ஸ்பேம் பிரச்சனைகளில் இருந்து பாதுகாக்கப்படவும் தொடர்ந்து ஜெபிப்போம்.
- போரின் காரணமாக உலகின் பல பகுதிகளில் நிலவும் அசாதாரண சூழ்நிலைகள் மாறிடவும் போரினால் பாதிக்கப்பட்ட மற்றும் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு ஆறுதல் கிடைக்கவும் மன்றாடுவோம்.

பரிசுத்த வேதாகமம் உண்மையா இல்லையா என்பது பெரிய பிரச்சனை அல்ல. அது உங்களில் உண்மையானதாக இருக்கிறதா என்பதுதான் பெரிய பிரச்சனை. - A W டோசர்

# திருச்சபைச் சீர்திருத்தத்தின் முழக்கங்கள்

### முழக்கம்: 3. கிருபை மட்டுமே! (Grace alone!)

'பெருங்கூட்ட சுவிசேஷப் பணியில் வேறெவரையும்விடத் தேவன் அவரை ஏன் அதிகமாய்ப் பயன்படுத்துகிறாரெனப் பில்லி கிரஹாமிடம் ஒரு முறை கேட்கப்பட்டதாம். அவரது பதில்: "நான் விண்ணகம் சென்றதும் தேவனிடம் கேட்கப்போகும் முதல் கேள்வி இதுதான். இன்று எனது பதில், அது தேவ **கிருபையே**!"

கிருபையை வலியுறுத்தும் அதே வேளையில் வேதனைக்குரிய ஒரு காரியமுமுண்டு. அதாவது, "மிகைப்படுத்தப்பட்ட **கிருபை**" (Hyper-grace) எனும் ஒரு நூதன உபதேசம் திருச்சபைக்குள் நுழைந்திருக்கிறது. "எப்படி வேண்டுமானாலும் வாழலாம், தேவ **கிருபை** எல்லாவற்றையும் பார்த்துக் கொள்ளும்" என்பதே ஏறத்தாழ இவ்வுபதேசத்தின் தாற்பரியம். இவ்வுபதேசம் வாலிபர், நங்கையர்க்குக் கவர்ச்சியாயிருப்பதால் இதனைப் பிரசங்கிக்கும் கூட்டங்களில் அவர்கள் திரளாய்க் கூடுகிறார்கள். இந்தியாவில் இவ்வுபதேசத்தினால் வெகுவாய்ப் பாதிக்கப்பட்டிருப்பது சென்னை நகர்தான்.

தனது காலத்திலேயே அப்போஸ்தலன் பவுல் "மிகைப்படுத்தப்பட்ட கிருபை" (Hyper-grace) போன்ற உபதேசங்களுக்கெதிராய் முன்னெச்சரித் தார். சீர்திருத்தக் காலங்களில் பாடப்புத்தகமாய் அமைந்திருந்த ரோமர் நிருபத்தில் ஒரு வசனப் பகுதியைப் பாருங்கள்: ரோமர் 5:20 முதல் 6:2 வரை, "பாவம் பெருகிய இடத்தில் **கிருபை** அதிகமாய்ப் பெருகிற்று... ஆகையால் என்ன சொல்லுவோம்? **கிருபை** பெருகும்படிப் பாவத்தில் நிலைநிற்கலாம் என்று சொல்லுவோமா? (கூடவே) கூடாதே! பாவத்திற்கு மரித்த நாம் இனி அதிலே எப்படிப் பிழைப்போம்?"

கிருபை என்பது பாவம் செய்வதற்கு உரிமம் அல்ல. பாவத்தை மேற்கொள்ள நமக்குள் தேவன் வைக்கும் அனுகூலமே அது. ரோமர் 6:14இலிருந்து இது தெளிவு: "நீங்கள் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டிராமல் கிருபைக்குக் கீழ்ப்பட்டிருப்பதால் பாவம் உங்களை மேற்கொள்ளமாட்டாது!" இதுதான் புதிய உடன்படிக்கையின் வாக்கு: எரேமியா 32:40, "அவர்கள் என்னை விட்டு அகன்றுபோகாதபடி, எனக்குப் பயப்படும் பயத்தை அவர்கள் இருதயத்தில் வைப்பேன்."

> நான் பரிசுத்த வேதாகமத்தைப் படிப்பதில் மும்முரமாக ஈடுபட்டிருக்கிறேன். நான் இருக்கும் இடத்திலேயே அது என்னைக் கண்டுபிடிப்பதால், இது தேவனுடைய வார்த்தை என்று நான் நம்புகிறேன். - ஆபிரகாம் லிங்கன்

கிருபையானது இலவசம்தான், ஆனால் மலி வானதல்ல. (Free, but not cheap!) விசுவாசத்திற்காய்ப் போராடிய அப்போஸ்தலன் யூதா மிகைப்படுத்தப்பட்ட கிருபை எனும் உபதேசத்தைக் கண் டித்தார். ''தேவ **கிருபையைக்** காமவிகாரத்துக்கேது வாகப் புரட்டும் பக்தியற்றவர்கள்'' பக்க வழியாய் நுழைவதைக் குறித்துப் பரிசுத்தவான்களை அவர் எச்சரித்தார் (யூதா 4).

அதே வேளையில், பிரியமானவர்களே, பிரமாணக் கொள்கை எனும் வலையிலும் சிக்கிவிடாதீர்கள். ''நீங்கள் மறுபடியும் அடிமைத்தனத்தின் நுகத்துக்குட்படாமல், கிறிஸ்து நமக்கு உண்டாக்கின சுயாதீன நிலைமையில் நிலைகொண்டிருங்கள்'' (கலாத்தியர் 5:1). பிரமாணக் கொள்கையைத் தழுவி னால் ''கிருபையிலிருந்து விழுந்து'' விடுவீர்கள் (வச 4). நாட்களை அனுசரித்தல், உணவுப் பழக் கங்கள் போன்றவையெல்லாம் தனி நபர்களின் விருப்புவெறுப்பைப் பொறுத்தவை (ரோமர் 14:6). ''தொடாதே, ருசி பாராதே, தீண்டாதே'' என்றெல் லாம் போதிக்கும் மார்க்கம் குறித்து எச்சரிக்கை! (கொலோசெயர் 2:20&23).

தேவனது இலவசமான கிருபை நம்மீது நிறைய பொறுப்புகளை வைக்கிறது. தேவனது ஏகாதிபத்தியத்தையும் மனிதனது பொறுப்பையும் (God's sovereignty & man's responsibility) நாம் சமநிலைப் படுத்தாவிடில் திருமறையின் ஒட்டுமொத்தமான உபதேசத்தைத் தவறவிடுவோம். எடுத்துக்காட்டாக, யை இழந்துவிடுவோம்'' (எபிரெயர் 12:14,15). இங்கு தேவ கிருபை என்பது கசப்புக்கு எதிரான அவரது கனிவைக் குறிக்கும். அவ்விதமே, ''தேவ கிருபையானது நாம் அவபக்தியையும் உலகு சார்ந்த தீய நாட்டங்களையும் வெறுத்து, தெளிந்த புத்தியும் நீதியும் தேவ பக்தியும் உள்ளவர்களாய் இவ்வுலகில் வாழவேண்டுமென நமக்குப் போதிக் கிறது'' (தீத்து 2:11,12).

நாம் மேற்கொள்ளும் ஆன்மீகப் பயிற்சி எதையும் குறித்துப் பெருமையடிக்காதபடிக் கவனமாயிருப் போம்! இடைவிடாமலும் சோர்ந்துபோகாமலும் ஜெபிக்கும்படி கிறிஸ்துவிடமிருந்து கட்டளை பெற் றிருக்கிறோம். தேவன் நமது ஜெபங்களுக்குப் பதில் தருகையில், நாம் ஜெபிப்பதைக் குறித்துப் பெரு மிதம் கொள்வது விழுந்த மனிதனின் சுபாவத்திற்கு இயல்பு. ஆனால் நினைவிற்கொள்ளவேண்டிய தொன்று: நமது ஜெபங்களை தேவனிடம் கொண்டு சேர்ப்பது நமது விசுவாசமானால், பதில்களைத் தேவனிடமிருந்து கொண்டுவருவது அவரது **கிருபையே**! எனவேதான் அவரது ஆசனம் ''கிருபாசனம்'' எனப்படுகிறது (எபிரெயர் 4:16).

தேவனது அனுதினக் கிருபைக்காய்த் துதித்த வண்ணமிருங்கள். புலம்பல் 3:22,23, ‘‘நாம் நிர் மூலமாகாதிருப்பது கர்த்தருடைய கிருபையே, அவரது இரக்கங்களுக்கு முடிவில்லை. அவை காலைதோறும் புதியவை, உமது உண்மை பெரி தாயிருக்கிறது.’’ தேவனது இரக்கமும் உண்மையும் சேர்ந்ததே கிருபை!

### பாடுங்கள் –

தம் கிருபை பெரிதல்லோ, எம் ஜீவனிலும் அதே
இம்மட்டும் காத்ததுவே, இன்னும் தேவை கிருபை தாருமே

தாழ்மையுள்ளவரிடம் தங்கிடுதே கிருபை, வாழ்நாளெல்லாம் அது போதுமே
சுகமுடன் தம் பெலமுடன், சேவை செய்யக் கிருபை தாருமே

நிர்மூலமாகாததும் நிற்பதுமோ கிருபை, நீசன் என் பாவம் நீங்கினதே
நித்திய ஜீவன் பெற்றுக் கொண்டேன் , காத்துக் கொள்ளக் கிருபை தாருமே

தினம் அதிகாலையில் தேடும் புது கிருபை, மூடும் திரை கிழிந்திடவே
தைரியமாய்ச் சகாயம் பெற, தேடி வந்தேன் கிருபை தாருமே

ஒன்றை ஒன்று சந்திக்கும், சத்தியம் உம் கிருபை
என்றும் மறவேன் வாக்குத்தத்தம், நீதியுமே சமாதானமே, நிலை நிற்கும் கிருபை தாருமே

ஸ்தோத்திர ஜெபத்தினால் பெருகுதே கிருபை, ஆத்தும பாரம் கண்ணீரோடே
சோர்வின்றி நானும் வேண்டிடவே, ஜெப வரம் கிருபை தாருமே

கர்த்தர் வெளிப்படும் நாள் அளித்திடும் கிருபை, காத்திருந்தே அடைந்திடவே
இயேசுவே உம்மைச் சந்திக்கவே, இரக்கமாய்க் கிருபை தாருமே

------------ தொடரும்

**(சகோ. R. ஸ்டான்லி அவர்கள் எழுதிய ”நான் நிற்கும் கன்மலை” என்ற நூலில் இருந்து)**

## நமது தரிசனம் & நமது பணித்திட்டம்

**நமது தரிசனம்**

ஜனங்கள் தேவனை சார்ந்து இருக்கும் வாழ்க்கையைக் கட்டமைத்துக் கொள்ள அவர்களுக்குத் தேவையான ஞானம், ஆக்கவளம் மற்றும் வலிமை அளிப்பது.

**நமது பணித்திட்டம்**

வேத வசனம் மற்றும் ஜெபத்தில் தங்களை அதிகமாக ஈடுபடுத்திக் கொள்வதன் மூலமாக ஜனங்கள் தேவனைச் சார்ந்து இருப்பதில் உதவ GODependence நாடுகிறது.

கர்த்தருடைய வசனத்தை அசட்டை செய்தல் உங்கள் ஆத்துமாவை கெடுத்துப் போடும்; தேவனுடைய வார்த்தையை தியானிப்பது ஆத்துமாவை போஷிக்கும்.

# சீரோ-பெனிக்கியப் பெண்

**அவளுடைய விடாப்பிடியான விசுவாசம் பலனளித்தது.**



(மத்தேயு 15:21-28; மாற்கு 7:24-30)

இயேசு தீரு (Tyre) பட்டணத்தின் எல்லைப்பகுதிக்குச் சென்றபோது, ஒரு சீரோ-பெனிக்கியப் பெண் அவரிடம் வந்தாள், அவளுடைய சிறு மகளை ஒரு பொல்லாத ஆவி பிடித்திருந்தது. அவள் இயேசுவின் பாதங்களில் விழுந்து, தன் மகளைப் பிடித்திருந்த பிசாசைத் துரத்திவிடும்படி அவரிடம் கெஞ்சினாள். அதற்கு இயேசு, "முதலில் பிள்ளைகள் வயிறார உண்ணட்டும், ஏனெனில் பிள்ளைகளுக்குரிய அப்பத்தை எடுத்து, நாய்களுக்குப் போடுவது நியாயமல்ல," என்று கூறினார். அதற்கு அவள், "ஆம் ஆண்டவரே! ஆனாலும் மேஜையின் அடியிலிருக்கும் நாய்கள்கூட, பிள்ளைகள் சிந்தும் சிறு துணிக்கைகளை உண்ணுமே," என்று பதிலளித்தாள். அப்பொழுது இயேசு அவளை நோக்கி, "நீ சொன்ன இந்தப் பதிலினிமித்தம், நீ போகலாம், பிசாசு உன் மகளை விட்டு நீங்கிவிட்டது," என்று கூறினார். அவள் தன் வீட்டிற்குச் சென்றபோது, தன் மகள் படுக்கையில் படுத்திருப்பதையும், பிசாசு அவளை விட்டு நீங்கிவிட்டதையும் கண்டாள்.

ஆரம்பத்தில், இயேசு அப்பெண்ணின் விண்ணப்பத்தை நிராகரிப்பது போலவே தோன்றினார்.ஆயினும், அவள் மனம் தளரவில்லை, மாறாக, அவளுடைய அசைக்க முடியாத விசுவாசம் இயேசுவின் மனதைத் தொட்டது, அதன் விளைவாக அவர் அவளுடைய சிறு மகளைக் குணமாக்கினார்.

இந்தச் சூழலைப் புரிந்துகொள்வது மிகவும் முக்கியம், ஏனெனில், யூதர்கள் யூதரல்லாத பிற இனத்தாரை (புறஜாதியாரை), கடவுளின் இரட்சிக்கும் கிருமைக்கு அப்பாற்பட்டவர்களாகவே கருதினர். அப்பெண் இந்த எதார்த்தத்தைப் புரிந்துகொண்டிருந்தாள், இருப்பினும், அதைப் பொருட்படுத்தாமல், மிகுந்த விசுவாசத்தோடு இயேசுவை அணுகினாள்.

கடவுளை அணுகுவதற்குத் தான் தகுதியற்றவள் என்று நீங்கள் உணரும் வேளையில், அவரை நீங்கள் எவ்வாறு அணுகுவீர்கள்? மனந்திரும்பும் இருதயம் கொண்ட எவரும், விசுவாசத்தோடு கடவுளை அணுகலாம் (லூக்கா 5:32).

உங்கள் ஜெபங்களுக்கு உடனடியாகப் பதில் கிடைக்கவில்லை என்று நீங்கள் உணரும்போது, உங்கள் எதிர்வினை என்னவாக இருக்கும்? நீங்கள் தொடர்ந்து ஜெபிப்பீர்களா?

**இந்தச் சீரோ-பெனிக்கியப் பெண்ணின் முன்மாதிரி, நாம் இடைவிடாமல் ஜெபிப்பதற்கு நம்மைத் தூண்டுகிறது.**

**– சகோ. பீட்டர் ஏ.ஆர்., பாலக்காடு, கேரளா.**

என் நண்பர்களே, தேவனை அவருடைய வார்த்தையில் உள்ளபடி ஏற்றுக்கொள்வோமாக. அவரை பரிசோதித்து நிரூபணம் செய்வோம். அப்பொழுது தேவன் உண்மையானவர் என்பதைக் கண்டுகொள்வோம். - டி எல் மூடி

# வேதவாசிப்பு சவால்கள்

## 01 மே 2026 முதல்

**"நான் எவ்வளவு அதிகமாக தேவனுடைய வார்த்தையை அறிந்துகொள்கிறேனோ, அந்தளவுக்கு அதிகமாக என் விசுவாசம் பெரிதாக இருக்கும்." - R.C. ஸ்ப்ரௌல்**

பரிசுத்த வேதாகமத்தை வாசிப்பது ஒருபோதும் அதை வாசிப்பவரைக் களைப்படையச் செய்வதில்லை, மாறாக வாசிப்பவரின் மனதைப் புதுப்பித்து புத்துணர்வூட்டுகிறது. வேதத்தை வாசிப்பதின் பலன்களை இதுவரை நீங்கள் பெறாதிருந்தால், 01 மே 2026 முதல் துவங்கும் "வேத வாசிப்புச் சவால்களில்" ஒன்றில் சேர்ந்து வேதம் வாசித்து மகிழ நாங்கள் (GODependence) உங்களை அன்புடன் அழைக்கிறோம்.




நாம் வேதத்தில் வசனங்களைத் தேடி வாசிக்கும்போது, நம் குணநலன் மற்றும் நடத்தை மீது அமர்ந்து நம்மை நியாயம் விசாரிக்கும்படி, நம்மைச் சோதித்தறியும்படி நாம் அவைகளை அனுமதிக்க வேண்டும். - ஜெரி ப்ரிட்ஜஸ்

**பின்வருவன நமது வேத வாசிப்புச் சவால் பங்கேற்பாளர்கள் சிலரது அனுபவ சாட்சிகள்:**

”இந்த வேதாகம வாசிப்பு சவால், தேவ வார்த்தை மெதுவாக என் இருதயத்தையும் சிந்தைகளையும் வடிவமைத்த ஒரு அமைதியான வளர்ச்சியின் காலமாக இருந்தது. தேவ கிருபையினால், எந்த சிரமமுமின்றி பரிசுத்த வேதாகமத்தை முழுமையாக வாசித்து முடிக்க முடிந்தது.” **R. Shirley Gainneos**

”முதலில் தமிழில் (2025 மார்ச்) அதைத் தொடர்ந்து ஆங்கிலத்தில் (2026 மார்ச்) முழு வேதாகமத்தையும் வாசித்து முடித்ததில் நான் மிகவும் ஆசீர்வதிக்கப்பட்டதாக உணர்கிறேன். இது GODependence குழுவினால் எனக்கு அளிக்கப்பட்ட மிகப் பெரிய வாய்ப்பு. அந்தக் குழுவினர் வருடம் முழுவதும் மிகுந்த பொறுமையோடும் அன்பான அக்கறையோடும் என்னை வழிநடத்தினார்கள். கர்த்தர் தாமே மகிமைப்படுவாராக.” **Dhinakaran K**

”இந்த வேதாகம வாசிப்பு சவால், தரமான வாசிப்புப் பழக்கத்தை எனக்குள் கட்டியெழுப்ப உதவியதோடு, தோல்வி, குழப்பம் மற்றும் ஆவிக்குரிய வறட்சியான நேரங்களில் தெளிவையும், சமாதானத்தையும், புத்துணர்ச்சியையும் கொண்டு வந்தது.” - J R Anisha

**இதன் சிறப்பு அம்சங்கள்:**

வேதவாசிப்பு சவாலின் காலம் 1 மாதம் முதல் 1 வருடம் வரை நீங்களே தெரிவு செய்யும் வாய்ப்பு. [முழு வேதாகமத்தையும் 1 மாதம் / 2 மாதங்கள் / 3 மாதங்கள் / 4 மாதங்கள் / 6 மாதங்கள் அல்லது 1 வருடத்தில் வாசித்தல்.]

10 மொழிகளில், உங்களுக்கு வசதியான ஒரு மொழியில் உள்ள குழுவில் இணைந்து கொள்ளலாம். [தமிழ், ஆங்கிலம், ஹிந்தி, மலையாளம், கன்னடம், தெலுங்கு, ஒடியா, பஞ்சாபி, மராத்தி அல்லது பெங்காலி]

முந்தின தினம் இரவிலேயே கொடுக்கப்படும் வேதவாசிப்புப் பகுதி.

# வேதவாசிப்பு சவால்கள்

## 01 மே 2026 முதல்

வேதவாசிப்பை உற்சாகப்படுத்தும் மேற்கோள்கள் அல்லது காணொளிகள்.

வேதவாசிப்பின் முன்னேற்றத்தை உறுதிப்படுத்த வாராந்திர, இருவார மற்றும் மாதாந்திர மீள்பார்வைகள்.

வாசிப்பில் நீங்கள் பின்தங்க நேர்ந்தால், விடுபட்ட பகுதிகளை வாசிக்க வாய்ப்பு! எமது வாசிப்புத் திட்டத்தில் Catch - Up நாட்கள் மற்றும் திட்டங்களை மாற்றிக் கொள்ளுதல் ஆகியவை உண்டு. ஏனென்றால் வாழ்க்கையின் சிரமங்களை நாங்கள் புரிந்துகொள்கிறோம்!

அனைவர் நலன் காக்கும் வாட்ஸ்அப் குழுக்களின் விதிமுறைகள்.

பாராட்டுச் சான்றிதழ்கள் மற்றும் பரிசுகள் (*நிபந்தனைகளுக்குட்பட்டது)

" எனவே, முழு வேதாகமத்தையும் வாசித்து முடிக்க நீங்கள் ஆர்வமாக இருந்தால், உங்கள் வசதிக்காக நாங்கள் வடிவமைத்துள்ள வேதவாசிப்புச் சவால்களில் ஒன்றில் சேர்ந்து கொள்ளுங்கள். உங்களுக்கு வசதியான ஒரு கால அளவுத் திட்டம் மற்றும் மொழி_யைத் தேர்ந்தெடுத்து, அத்துடன் உங்கள் _பெயர் (வேதவாசிப்புச் சவாலை வெற்றிகரமாக முடிக்கும் போது அதற்கான பாராட்டுச் சான்றிதழில் அச்சிடப்பட வேண்டிய விதத்தில்) மற்றும் வயதை இந்த இணைப்பில் https://wa.me/96565962559 கிளிக் செய்து, +965 6596 2559 என்ற WhatsApp எண்ணிற்கு தெரிவிக்கவும்.

நன்றி. தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. ஆமென்.

- GODependence குழு

CLICK HERE wa.me/96565962559

**** இந்த செய்தியை உங்கள் குடும்ப உறுப்பினர்கள், உறவினர்கள், கிறிஸ்தவ நண்பர்கள் மற்றும் உங்கள் சபை உறுப்பினர்கள் அனைவருடனும் பகிர்ந்து கொள்ளுங்கள்... இதனால் அவர்களும் வழக்கமாக வேதாகமத்தை வாசிக்கும் பழக்கத்திற்குள் வரலாமே! "

நான் தேவனுடைய புத்தகம்: மனிதனே, என்னை வாசி. நான் தேவனுடைய வார்த்தை: என்னைத் திறந்து பார், தேவனால் எழுதப்பட்ட வார்த்தையாக நான் இருக்கிறபடியால், என்னை வாசி. ஏனெனில் அவரே என்னை எழுதிய ஆசிரியர், எல்லா இடங்களிலும் அவரைப் பார்க்கவும், அவர் தன்னை வெளிப்படுத்துவதையும் நீ காண்பாய். - சார்லஸ் ஸ்பர்ஜன்

GODependence
True freedom is being dependent on God

# வேத வாசிப்புச் சவால்கள்

## 10* மொழிகளில் 6 விதமான வேதவாசிப்புத் திட்டங்கள்

*எமது வேத வாசிப்புச் சவால்கள் ஒவ்வொரு மாதமும் முதல் தேதியில் துவங்குகிறது.

| | | |
|---|---|---|
| 1 மாத வேதவாசிப்புச் சவால்<br>தினமும் 45 அதிகாரங்கள்<br>வாசிப்பு நேரம்<br>2 மணி 30 நிமிடங்கள் | 2 மாத வேதவாசிப்புச் சவால்<br>தினமும் 22 அதிகாரங்கள்<br>வாசிப்பு நேரம்<br>1 மணி 30 நிமிடங்கள் | 3 மாத வேதவாசிப்புச் சவால்<br>தினமும் 15 அதிகாரங்கள்<br>வாசிப்பு நேரம்<br>60 நிமிடங்கள் |

உங்களுக்கு வசதியான வேதவாசிப்புத் திட்டத்தைத் தேர்ந்தெடுக்கும் வசதி

| | | |
|---|---|---|
| 4 மாத வேதவாசிப்புச் சவால்<br>தினமும் 11 அதிகாரங்கள்<br>வாசிப்பு நேரம்<br>45 நிமிடங்கள் | 6 மாத வேதவாசிப்புச் சவால்<br>தினமும் 7 அல்லது 8 அதிகாரங்கள்<br>வாசிப்பு நேரம்<br>25 நிமிடங்கள் | 1 வருட வேதவாசிப்புச் சவால்<br>தினமும் 3 அல்லது 4 அதிகாரங்கள்<br>வாசிப்பு நேரம்<br>15 நிமிடங்கள் |

இன்னும் தாமதம் ஏன்?
இன்றே சேருங்கள்.

தொடர்புக்கு: +965 6596 2559

கீழே கொடுக்கப்பட்ட மாதிரியின் படி வாட்சப்பில் உங்கள் விவரங்களை அனுப்பவும்:
<உங்கள் பெயர்> <வயது> <காலஅளவு> <மொழி>.

*உங்களுக்கு ஏற்ற வேதவாசிப்புத் திட்டம் மற்றும் விருப்பமான மொழியில் எங்கள் வேத வாசிப்புச் சவால்கள் ஒன்றில் நீங்கள் சேரலாம்.

*எங்கள் வேதவாசிப்புச் சவால்கள் ஆங்கிலம், தமிழ், இந்தி, மலையாளம், கன்னடம், தெலுங்கு, ஒடியா, பஞ்சாபி, மராத்தி மற்றும் பெங்காலி மொழிகளில் உண்டு.

தேவனுடைய சத்தியத்தை அறிந்து கொள்வதே சாத்தான் அவிழ்த்துவிடும் பொய்களுக்கு எதிரான மிகச் சிறந்த பாதுகாப்பு ஆகும்.

# GODependence வேதவாசிப்பு சவால்கள்

GODependence
True freedom is being dependent on God

## Bible Reading Challenges

## GODependence வேதவாசிப்புச் சவால்களில் உள்ள சிறப்புத் தன்மைகள்

1. 1 மாதம் முதல் 1 வருடம் வரையிலான வேதவாசிப்பு காலத்தை வசதிக்கேற்ப தெரிவு செய்து கொள்ளும் வாய்ப்பு. [முழு வேதாகமத்தை 1 மாதம் / 2 மாதங்கள்/ 3 மாதங்கள்/ 4 மாதங்கள்/ 6 மாதங்கள் அல்லது 1 வருடத்தில் வாசித்தல்].
2. உங்களுக்கு விருப்பமான மொழியில் வேதத்தை வாசிக்கும் வாய்ப்பு-10 மொழிகள் (ஆங்கிலம், தமிழ், இந்தி, மலையாளம், கன்னடம், தெலுங்கு, ஒடியா, பஞ்சாபி, மராத்தி மற்றும் பெங்காலி).
3. வேதவாசிப்புப் பகுதி முந்தின தினம் இரவிலேயே பகிரப்படும்.
4. வேதவாசிப்பை உற்சாகப்படுத்தும் அனுதின மேற்கோள்கள் (Quotes).
5. வேத வாசிப்பில் முன்னேற்றத்தை சுயபரிசோதனை செய்து கொள்ள உதவும் வாரந்தோறும், இரண்டு வாரங்களுக்கு ஒருமுறை, மற்றும் மாதமொரு முறை என நடைபெறும் மீள்பார்வைகள் (Reviews).
6. தவறிய பகுதிகளை வாசிக்க Catch-Up நாட்கள் மற்றும் தேவைப்பட்டால் வேதவாசிப்பு காலத் திட்டங்களை மாற்றிக் கொள்வதற்கான வாய்ப்பு.
7. அனைவர் நலன் காக்கும் வாட்ஸ்அப் குழுக்களின் விதிமுறைகள் - இது வேதவாசிப்புக்கென உள்ள தனித்துவமான குழு.
8. பாராட்டுச் சான்றிதழ்கள் மற்றும் பரிசுகள் (நிபந்தனைகளுக்கு உட்பட்டது).
9. நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ எங்கும் எந்த விதமான கட்டணமும் கேட்கப்படாது.
10. தேவனுடைய வார்த்தையுடன் (வேத தியானம், வேத மனனம் மற்றும் வேத ஆராய்ச்சி என) மேற்கொண்டு ஈடுபடுவதற்கான வாய்ப்பு.

**முறையாக மற்றும் முழுமையாக**
**வேதாகமத்தை வாசிக்க மிக அருமையான ஒரு வாய்ப்பு!**

https://www.godependence.com/brc

நாம் பரிசுத்த வேதாகமத்தை வாசித்து தியானிக்கையில், தேவனுடைய சித்தத்தையும் இந்த உலகத்தில் உள்ள அவருடைய ஜனங்களுக்கான அவருடைய திட்டத்தையும் நாம் கண்டுகொள்கிறோம்.

# வேதாகம குறுக்கெழுத்துப் புதிர் - 18

## வேதப்பகுதி: எபிரெயர்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1→ | | | | 2↓ | | | |
| 3→ | | | ■ | | ■ | 4↓ | |
| 5↓ | 6→ | | | | | | |
| | | | ←7 | | 8↑ | ■ | |
| | 9→ | | | | | | |
| | | | | | | ←10 | |
| 11→ | | | | | | | 12↑ |
| 13→ | | | | | | | ←14 |

### இடமிருந்து வலம்

1. இளைப்பாறுதலில் பிரவேசிப்பதற்கேதுவான __ நமக்கு உண்டாயிருக்கிறது (8)
3. ஆணையிடுதலே சகல விவாதத்திற்கும் _ (3)
6. காயீனுடைய பலியிலும் மேன்மையான பலியை செலுத்தினவன் (3)
9. கிருபாசனத்தை நிழலிட்டிருந்தவை (6)
11. புது உடன்படிக்கையின் மத்தியஸ்தர் (3)
13. பிசாசு மரணத்துக்கு _(4)

### வலமிருந்து இடம்

7. நம்முடைய _ பட்சிக்கிற அக்கினி (3)
10. இயேசு சர்வத்துக்கும் _____ (7)
12. இரத்தம் சிந்துதலில்லாமல் __ உண்டாகாது (5)
14. மரணத்தை காணாத படிக்கு எடுத்துக் கொள்ளப்பட்டவன் (4)

### மேலிருந்து கீழ்

2. _ சிட்சியாத புத்திரனுண்டோ? (5)
4. தேவனுடைய வீட்டில் எங்கும் உண்மையுள்ளவன் (2)
5. இயேசு விசேஷித்த உடன்படிக்கைக்கு __ (4

### கீழிருந்து மேல்

9. 8. நீதிக்கு சுதந்தரவாளியானவன் (2)
12. மரணம் உண்டான பின்பு உறுதிப்படுவது (7)

**குறிப்பு** : பதில்கள் அனைத்தும் வசன ஆதாரத்துடன் இருக்கவேண்டும். வேதாகமத்தைப் பார்த்துக் கண்டுபிடிக்கலாம்.

CLICK HERE https://forms.gle/tg2MAx94oPvMXF5a8

கொடுக்கப்பட்ட இணைப்பை கிளிக் செய்து சரியான பதிலை 30/04/2026க்கு முன்பதாக அனுப்பவும். சரியான பதில் அனுப்பும் முதல் 10 நபர்களுடைய பெயர்கள் அடுத்த மாத இதழில் குறிப்பிடப்படும்.



பரிசுத்த வேதாகமம் எவ்வளவு அழகு! அது மிகவும் அவசியமான உணவு ஆகும். - சார்லஸ் ஸ்பர்ஜன்

# இந்திய அப்போஸ்தலன்
# சாது சுந்தர்சிங் (1889-1929)

[சென்ற மாத இதழின் தொடர்ச்சி ......என்றாலும், மனதிலே பரிபூரண மகிழ்ச்சியோடு தனது நாயகராம் இயேசு கிறிஸ்துவுக்காக எதையும் பொறுமையோடு ஏற்றுக் கொண்டார். கடைசியாக நஞ்சு கொடுக்கப்பட்டு வீட்டிலிருந்து அவர் துரத்தப்பட்டு, நோய்வாய்ப்பட்டார். இறக்கும் நிலையையும் அடைந்தார். என்றாலும், அவரிடம் அன்பு கொண்ட ஆண்டவர் தம் சித்தத்தைச் சுந்தரிலே நிறைவேற்ற மரணப்பிடியிலிருந்த சுந்தரை விடுவித்தார்.

இந்தக் கொடிய நோயிலிருந்து சுந்தர் விடுப்பட்டார். இவர் லூதியானாவில் இருந்த மிஷனெரிகளிடத்தில் சென்று அவர்களோடு தங்கினார். வேத வசனங்களைக் கற்க ஆரம்பித்தார். சுந்தர் தம் 16ஆம் பிறந்த தினத்தன்று சிம்லா நகரத்தில் ஞானஸ்நானம் பெற்றார். ஆழமான சிந்தனைக்கும் உறுதியான ஜெபத்திற்கும் பின்னர் சாது சுந்தர்சிங் தன்னை பரிபூரணமாக இயேசு கிறிஸ்துவின் கரத்தில் அர்ப்பணித்தார். அவர் ஒரு கிறிஸ்தவ சாதுவாக மாறினார். தனிப்பட்ட முறையிலே தனக்குச் சொந்தம் என்று வைத்திருந்த உடமைகள், தன்னுடைய புத்தகங்கள் எல்லாவற்றையும் விட்டுவிட்டு அவர் காவி உடை அணிந்து கொண்டார். வெறும் கால்களோடும், கையில் ஏந்திய வேதபுத்தகத்தின் பகுதியாகிய புதிய ஏற்பாட்டோடும் எந்தவிதமான மனிதரின் உதவியும் இல்லாத நிலைமையில் தன்னை ஆட்கொண்ட கிறிஸ்துவுக்காக அவர் புறப்பட்டுச் சென்றார்.
"நானோ நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சிலுவையைக் குறித்தேயல்லாமல் வேறொன்றையுங்குறித்து மேன்மைபாராட்டாதிருப்பேனாக, அவரால் உலகம் எனக்குச் சிலுவையிலறையுண்டிருக்கிறது" (கலாத்தியர் 6:14) என்ற வசனத்தைத் தன்னுடைய வாழ்க்கையின் குறிக்கோளாக அவர் ஏற்றுக்கொண்டார். "என்மீது உள்ள அன்பினாலே இயேசு கிறிஸ்து தம்மைத் தியாகம் பண்ணினார். அதைப்போலவே நானும் கிறிஸ்துவின்மேல் உள்ள என்னுடைய அன்பினால் என்னைத் தியாகம் செய்ய வேண்டும்" என்று அவர் அடிக்கடி கூறுவது உண்டு.

### சுந்தர் ஒரு சாது:

தனது வாலிபத்தின் துவக்கத்தில் சுந்தர் தனது எஜமானாகிய இயேசு கிறிஸ்துவுக்காகப் பட்டினி, குளிர், சுகவீனம் மற்றும் சிறைவாசத்தையும்கூட அனுபவித்து விட்டார். தனது எஜமானின் அன்பைக் கேட்டிராத மக்களுக்கு அதனை அறிவிக்கும்படி அவர் ஆண்டுதோறும் பஞ்சாப், காஷ்மீர், ஆப்கானிஸ்தானம், நேபாளம், திபெத் ஆகிய இடங்களுக்கு மலைகள், காடுகள் வழியாகத் தன்னந்தனியாக பிரயாணம் செய்தார். பல வேளைகளில் பகை, எதிர்ப்பு இவற்றைச் சந்தித்ததுண்டு. பசியோடு விரட்டப்பட்ட நிலைமையில் அவர் காடுகளுக்கு உள்ளாகச் சென்று அங்கே தங்குவதும் உண்டு. குளிர்ந்த காற்றிற்கும் மழைக்கும் தன்னைத் தப்புவிப்பதற்காகக் காடுகளிலே உள்ள குகைகளிலே அவர் தங்குவது உண்டு. பலவேளைகளில் அவர், தான் தங்கியிருக்கும் குகைகளைக் காட்டு மிருகங்களோடு பகிர்ந்து கொள்வதும் உண்டு. ஒருநாள் காலையில் ஒரு சிறுத்தை தான் தங்கியிருந்த குகையில் தனக்குச் சமீபத்தில் உறங்கிக் கொண்டிருப்பதை அவர் பார்த்தார். மற்றொரு முறை ஒரு வேங்கைப் புலியோடு கூட அவர் படுத்து உறங்கியதையும் அறிந்தார். ஒருநாள் அதிகாலையில் தன்னுடைய போர்வையின் கீழே ஏதோ ஒன்று இருப்பதுபோல உணர்ந்த அவர் அது என்ன என்று பார்த்தபோது, குளிரால் பாதிக்கப்பட்ட ஒரு பெரிய நல்ல பாம்பு அனல் பெறுவதற்காக அவரோடுகூடப் படுத்திருந்ததையும் அறிந்தார். இமயமலைப் பகுதிகளில் உள்ள கணவாய் வழியாகப் பிரயாணம் பண்ணுவது என்றாலும் அவர் எப்போதுமே வெறுங்கால்களோடுதான் தன் பிரயாணத்தை மேற்கொண்டார். ஆனபடியினால், கற்கள், பனிக்கட்டிகள் போன்றவற்றினால் அவர் கால்கள் கிழிக்கப்பட்டு அவர் கால்களில் இருந்து இரத்தம் கசிந்து கொண்டே இருக்கும். ஆகவே இவர், "இரத்தம் கசியும் கால்களை உடைய அப்போஸ்தலன்" என்று அழைக்கப்படுகிறார்.

பலவேளைகளில் பலவிதமான முறைகளில் அவர் துன்பப்படுத்தப்படும்போதும், அவர் மகிழ்ச்சியோடும் பொறுமையோடும் இருப்பதைக் கண்ட அநேகர் அவருடைய நற்செய்தியை ஏற்றுக்கொள்ள முன்வந்தனர். ஒரு சமயம் ஒரு கிராமத்துக்குச் சென்று அங்கிருந்த மரத்தடியில் உட்கார்ந்து பாடல்கள் பாட ஆரம்பித்தார். அதிசீக்கிரம் ஒரு பெரிய கூட்டம் கூடிவிட்டது. ஆனால் அவர் இயேசு கிறிஸ்துவைப் பற்றி அங்கு பேசுவதைக் கேட்ட உடனே அந்தக் கூட்டம் அவர்மேல் கோபம் கொண்டது.

பரிசுத்த வேதாகமமானது நம் வீடுகளில் பயன்படுத்தப்படாமல் இருக்குமெனில் அதினால் ஒரு பயனுமில்லை. அதில் என்ன இருக்கிறது என்பதை நாம் நன்றாக அறிந்து, அதில் உள்ள வசனங்களை நம் மனதிலும் நினைவிலும் பொக்கிஷமாக சேர்த்து வைத்துக்கொள்ள வேண்டும்.

அக்கூட்டத்தில் குரூப்பராம் என்ற ஒருவன் மிகவும் மூர்க்கம் கொண்டு, சாதுவைப் பலமாகத் தாக்கினபடியினால் அவர் உட்கார்ந்த இடத்திலிருந்து கீழே விழுந்தார். அவர் கைகளும், முகமும், கன்னங்களும் கீழே கிடந்த பாறைகளினால் காயப்பட்டு இரத்தம் கசிய ஆரம்பித்தது. என்றாலும் மிகவும் சாந்தமாக அவர் எழுந்து, அந்த மக்களின் மன்னிப்புக்காக ஜெபம் செய்துவிட்டு, மறுபடியும் ஆண்டவரின் அன்பைப் பற்றிக் கூற ஆரம்பித்தார். இவரது சாந்தம் குரூப்பராம் என்பவனை ஆழமாகத் தொட்டது. பின்பு அவன் ஒரு விசுவாசியாக மாறினான். கொள்ளைக்காரனின் உறைவிடமான ஒரு காட்டினை ஒருமுறை சுந்தர்சிங் கடந்து செல்ல நேரிட்டது. திடீரென்று அவரை நோக்கி திருடர் நால்வர் பாய்ந்து வந்தனர். ஒருவன் கையிலே கூர்மையான கத்தியை வைத்திருந்தான். தனக்கு முடிவு வந்துவிட்டது என்று எண்ணிய சுந்தர் மௌனமாக ஜெபிக்க ஆரம்பித்தார். இவ்விதமாக அவர் ஜெபித்ததைக் கண்ட அவன் ஆச்சரியப்பட்டு அவர் யார் என்று விசாரித்தான். தான் ஒரு கிறிஸ்தவ சாது என்றார். அத்துடன் தன்னுடைய கையில் உள்ள புதிய ஏற்பாட்டைத் திறந்து ஐசுவரியவான், லாசரு பற்றி எழுதியிருக்கிற பகுதியை வாசித்து விளக்கினார். கத்தியோடு அவரை நெருங்கிய அந்த மனிதனில் ஆழமான பாவ உணர்வு ஏற்பட்டது. அவன் சுந்தரைத் தனது குகைக்கு அழைத்துச் சென்று அங்கே அவன் கொன்று குவித்திருந்த மனிதர்களின் எலும்புக்கூடுகளை அவருக்குக் காண்பித்து, இத்தனை கொலைகளுக்கும், நான்தான் பொறுப்பு என்று துக்கத்தோடு கூறினான். சுந்தர் இயேசு கிறிஸ்துவின் மூலமாக அவனுக்குக் கொடுக்கப்பட்டுள்ள மன்னிப்பினை ஏற்றுக் கொள்ளும்படியாகக் கூறி அவனை இரட்சிப்பிற்குள் நடத்தினார்.

## திபெத் நாட்டில் சுந்தர்:

கிறிஸ்துவையே கேள்விப்பட்டிராத கடினமான அபாயம் நிறைந்த இடங்களுக்கெல்லாம் சுந்தர் தீர்மானத்துடனும், தைரியத்துடனும் சென்றார். அவருடைய இதயமும், எண்ணமும் திபெத்தின்மேல்தான் அதிகமாக இருந்தது. பேய்களுக்குப் பயப்படுவதிலும், பில்லிசூனியங்கள் செய்வதிலும், பல மூடநம்பிக்கைகளிலும் திபெத் மூழ்கியிருந்தது. லாமாக்கள் என்ற மதத்தலைவர்களால் திபெத் நாட்டின் ஏழை மக்கள் அதிகமாக ஒடுக்கப்பட்டார்கள். திபெத் மக்கள் புத்த மார்க்கத்தை தழுவியவர்களாக இருந்தார்கள். பலவிதமான ஜெபங்கள் எழுதப்பட்டிருந்த சக்கரங்களைச் சுற்றுவதும், ஜெபங்கள் எழுதப்பட்டிருந்த கொடிகளைக் காற்றிலே பறக்கவிடுவதுமே அவர்கள் ஜெபிப்பதற்குரிய ஒரே வழி என்று எண்ணினர். இவர்கள் ஒருபோதும் இயேசு கிறிஸ்துவைப் பற்றி கேள்விப்படாதவர்கள். ஆகவே, சுந்தர் பலமுறை திபெத் நாட்டிற்குச் சென்றார். ஒருமுறை கடல் மட்டத்திலிருந்து 16,000 அடி உயரம் உள்ள குளிர் நிறைந்த ஒரிடத்தில் திறந்த வெளியில் படுத்து உறங்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

ஒருமுறை அவர் ஒரு சிறுபட்டணத்தில் ஆண்டவரைப் பற்றிச் சொல்லிக் கொண்டிருந்தபோது வெளிநாட்டு மார்க்கத்தை இங்குப் பிரசங்கித்ததற்காக அவர் குற்றம் சாட்டப்பட்டுக் கைதியாக்கப்பட்டார். அவருடைய ஆடைகளை உரிந்துவிட்டு அவரை ஆழமான தண்ணீர் அற்ற கிணற்றில் தள்ளி கிணற்றின் மேற்புறத்தை மூடி பூட்டி விட்டார்கள். இதற்கு முன்னால் இவ்விதமாகப் பலர் அந்தக் கிணற்றிலே தள்ளப்பட்டிருந்தனர். சுந்தர் கிணற்றினுள் கிடந்த எலும்புக் குவியல் மற்றும் அழுகிக் கிடந்த சடலங்கள் இவற்றின்மேல் விழுந்தார். இப்பாழ்குழிக்குள் விழுந்தபோது அவர் கை காயப்பட்டதினாலும் குழியிலே இருந்த துர்நாற்றத்தினாலும் அவர் அதிகமாக வேதனைப்பட்டார். அந்த இருண்ட கிணற்றிற்குள் உணவோ, தண்ணீரோ, தூக்கமோ இன்றி அவர் மூன்று நாட்கள் கிடந்தார். மூன்றாவது இரவிலே அவர் ஆண்டவரை நோக்கி ஜெபித்துக் கொண்டிருக்கும்போது ஒரு சத்தம் எழும்புவதைக் கேட்டார். அந்த கிணற்றின் மேல் பாகத்தில் உள்ள அந்தக் கதவு திறக்கப்படுவதையும், அதிலிருந்து இறக்கப்படும் கயிற்றினைப் பற்றிக் கொள்ளும்படியாகச் சொல்லப்பட்ட ஒரு சத்தத்தையும் கேட்டார். அவர் கயிற்றைப் பிடித்தார். சீக்கிரமாக அவர் கிணற்றிற்கு வெளியே எடுக்கப்பட்டார். அவரை அக்கிணற்றிலிருந்து விடுவித்த அடையாளம் தெரியாத அம்மனிதன் அந்தக் கதவைப் பூட்டிவிட்டு இரவின் இருளிலே மறைந்துவிட்டார். தன்னைக் கடவுள்தான் இவ்விதமாகக் காப்பாற்றினார் என்பதை சுந்தர் பின்னர் புரிந்து கொண்டார். தன்னுடைய உடலிலே தேவையான பலம் பெற்றவுடன் மீண்டும் அவர் இரட்சிப்புக்காக ஏங்கித் தவித்துக் கொண்டிருக்கும் உள்ளங்களுக்கு நற்செய்தியைப் பிரசங்கிக்க ஆரம்பித்தார். பலர் இரட்சிப்பைப் பெற்றனர்.

## நேபாளத்தில் சுந்தர்:

இந்தியாவின் வடபாகத்தில் அமைந்திருக்கும் இன்னொரு நாடு நேபாளம். சாது சுந்தர்சிங் காலத்தில் இங்கு நற்செய்தி பிரசங்கிக்கப்படுவதற்குத் தடைவிதிக்கப்பட்டிருந்தது. சுந்தர் நேபாளத்திற்குச் சென்று அங்கு கிறிஸ்துவைப் பிரசங்கித்தார். இதனால் அவர் கைது செய்யப்பட்டு சிறைச்சாலையில் அடைக்கப்பட்டார். சிறைச்சாலையில் இருந்த மற்ற கைதிகளுக்கு அவர் கிறிஸ்துவைப் பற்றிக் கூறினார்.


பரிசுத்த வேதாகமத்தைப் புரிந்துகொள்வதற்கு எளிதான வழிமுறை என்னவெனில், வேதத்தில் உள்ள ஒவ்வொரு வரிகளிலும் தேவன் பேசுகிறார் என்ற உண்மையை ஏற்றுக்கொள்வது ஆகும். - டொனால்டு

கிறிஸ்துவைப் பற்றிக் கூறுவதிலே தம் நேரத்தைப் போக்கினார். எனவே, அவரைத் தனியாக ஒரு சிறிய அறையிலே அடைத்துவிட்டார்கள். அது ஒரு மாட்டுக் கொட்டகையாக இருந்தது. அவரது ஆடைகளைக் கழற்றி, கைகளையும், கால்களையும் ஒரு கம்பத்தில் கட்டி அவர்மீது அட்டைகளை (Leeches) விட்டுவிட்டார்கள். அவை அவருடைய இரத்தத்தை உறிஞ்சியது. பலம் குன்றிப் போனார். என்றாலும், அந்த அதிகமான வேதனையிலும் கடவுளிடம் ஜெபிக்கவும், அவரை துதிக்கவும் ஆரம்பித்தார். இதைப் பார்த்த அதிகாரிகள் அவருக்குப் புத்தி சுவாதீனம் இல்லை என்று எண்ணி உடனடியாக விடுதலை செய்தார்கள். அட்டைகளினால் இரத்தம் உறிஞ்சப்பட்டு பலவீனமான நிலையில் இருந்தபோதிலும் மறுபடியுமாகப் பக்கத்திலிருந்த ஊருக்குச் சென்று தெருவிலே நின்று நற்செய்தியைச் சொல்ல ஆரம்பித்தார்.

அவருக்கு நேரிட்ட எல்லா துன்பத்திலும், ”என்னுடைய இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவுக்காக நான் பாடு அனுபவிப்பது ஒரு மாபெரும் மகிழ்ச்சி” என்று சுந்தர் கூறுவார். ”இந்த மாபெரும் மகிழ்ச்சியின் இரகசியம் என்ன?” என்றால் ”என்னுடைய எல்லாவித துன்பங்களிலும் ஆத்துமாக்களுக்கான கடும் உழைப்புகளிலும் என்னுடைய ஆறுதல், நம்பிக்கை, ஊக்கம் அனைத்தும் கிறிஸ்துவின் சிலுவையே அன்றி வேறல்ல. எனக்காக கிறிஸ்து பரலோகத்தை விட்டு இறங்கி சிலுவை பாரத்தைச் சுமந்தார். ஆகையால் நான் கிறிஸ்துவுக்காக ஆத்துமாக்களை ஆதாயம் பண்ணுவதில் பாடுபடுவது ஒரு பெரிய காரியம் அல்ல” என்று கூறினார். நேபாளத்தில் சிறைச்சாலை அனுபவம் எப்படிப்பட்டதாய் இருந்தது என்று கூறும்போது, ”கிறிஸ்துவின் பிரசன்னம் அச்சிறைச்சாலையில் என்னோடுகூட இருந்தபடியினாலே அது ஆசீர்வாதமான ஒரு மோட்சமாக இருந்தது” என்றும் கூறினார்.

### உலகத்திற்கு அவரது அறைகூவல்:


அவர் பட்டப்பாடுகளும் அவரது ஒப்பற்ற அனுபவங்களும் விரைவில் வெளி உலகின் கவனத்திற்கு வந்தது. உலகின் பல பாகங்களில் உள்ள கிறிஸ்தவ மக்களின் சிந்தனை இந்த ”இந்திய அப்போஸ்தலர்” மீது பதிய ஆரம்பித்தது. கிறிஸ்தவர்களுக்கும் மற்றவர்களுக்கும் பிரசங்கிக்க வேண்டும் என்ற அழைப்பு அவருக்கு இந்தியாவின் எல்லா பாகங்களிலிருந்தும் வந்தது. அவர் சென்ற இடங்களில் எல்லாம், தன்னைத்தான் வெறுத்து தன் சிலுவையை எடுத்துக் கொண்டு சிலுவை நாதரைப் பின்பற்ற வேண்டும் என்பதையே அறைகூவலாகவும், மிஷனெரி அழைப்பாகவும் கூறினார். இவரது மிஷனெரி அறைகூவல்கள் அநேகரை ஜெபிப்பதற்கும் செயல்படுவதற்கும் தூண்டிவிட்டது. இலங்கை, பர்மா, மலேசியா, சீனா, ஜப்பான் ஆகிய நாடுகளுக்குச் சென்று பிரசங்கித்தார். மேலும், இங்கிலாந்து, அமெரிக்கா, ஆஸ்திரேலியா இன்னும் ஒரு சில ஐரோப்பிய நாடுகளுக்கும் சென்று நற்செய்தி வழங்கினார்.
அவர் எங்கெல்லாம் சென்றாரோ அங்கெல்லாம் அவரைக் கண்ட மக்கள் அவரில் இயேசு கிறிஸ்து சாயலை கவனித்தார்கள். ஒருமுறை அவர் பேசிக் கொண்டிருந்த ஒரு கூட்டத்தில் ஒரு சிறுமி, ”இவர் இயேசு கிறிஸ்துவா?” என்று கேட்டாளாம். ஆத்துமாக்களைக் குறித்த பாரத்திலும், தூய்மையாகத் தன்னைக் காத்துக் கொள்வதிலும் சுந்தர் நிச்சயமாகவே தன்னுடைய அருமை நாதராம் இயேசு கிறிஸ்துவைப் பிரதிபலித்துக் காண்பித்தார்.

### அவரது இறுதி வார்த்தைகள்:

”பிரயாணத்தின் கடினத்தையும் அதிலே ஏற்படவிருக்கும் அபாயங்களையும் நான் முழுவதுமாக உணர்கிறபோதிலும் நான் இன்றைக்குத் திபெத் நோக்கிப் பிரயாணம் செய்கிறேன். ஏனென்றால், நான் என்னுடைய கடமையை முழுமையாக நிறைவேற்ற வேண்டும்” என்று 1929ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 18ஆம் தேதி தன்னுடைய நண்பர்களுக்கு எழுதிய குறிப்பிலே எழுதியிருந்தார்.
திபெத் சென்றுவிட்டுத் திரும்பி வருவதற்கான சமயம் கடந்துவிட்டது. ஆனால் அவரோ வரவில்லை. எந்தவிதமான செய்தியும் அவரிடத்தில் இருந்து கிடைக்கவில்லை. ஒருவேளை அவர் பிரயாணத்தில் மலைச் சிகரங்களைக் கடந்து செல்லும்போது ஏதோ ஒரு பாதாளத்தில் விழுந்து இறந்திருக்கலாம். அல்லது ஓர் ஆழமான கிணற்றிலே தூக்கிப் போடப்பட்டிருக்கலாம். அல்லது ”யாக்” என்னும் எருமையின் நனைந்த தோலுக்குள்ளாக வைத்துக் கட்டப்பட்டுச் சுருட்டப்பட்டு அவருடைய எலும்புகள் முறிக்கப்பட்ட நிலையிலே அவர் ஓர் இரத்த சாட்சியாக மரித்திருக்கலாம். அவரது முடிவு எப்படியாக இருந்தாலும் இந்தியாவின் அப்போஸ்தலராகிய சாது சுந்தர்சிங் தனது ஜீவகிரீடத்தைப் பெற்றுக் கொண்டார் என்பது மட்டும் உறுதியானது.

**[தியோடர் வில்லியம்ஸ் எழுதிய “சிலுவையின் ஊழியர்கள்” (IEM Outreach பப்ளிகேஷன்ஸ்) என்னும் புத்தகத்திலிருந்து]**

பரிசுத்த வேதாகமத்தின் நோக்கம் மனிதர்கள் எவ்வளவு நல்லவர்கள் என்பதைப் பற்றிச் சொல்வது அல்ல; மாறாக, கெட்ட மனிதர்கள் எப்படி நல்லவர்களாக முடியும் என்பதாகும். - டி.எல்.மூடி



## உங்களுக்குத் தெரியுமா?

### தாவீதின் வம்சத்திற்கான சான்றுகளை டெல் டான் கல்வெட்டு வழங்குகிறது

டெல் டான் கல்வெட்டு என்பது 1993-ல் வடக்கு இஸ்ரேலில் உள்ள டெல் டான் என்ற இடத்தில் கண்டுபிடிக்கப்பட்ட மூன்று பாகங்களைக் கொண்ட ஒரு கல் பலகையாகும். ஆபிரகாம் பிரான் தலைமையிலான தொல்பொருள் ஆய்வுக் குழுவின் உறுப்பினரான கிலா குக் என்பவரால் இது கண்டுபிடிக்கப்பட்டது.

இந்தத் துண்டுகள் தற்போது ஜெருசலேமில் உள்ள இஸ்ரேல் அருங்காட்சியகத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

டெல் டான் கல்வெட்டு என்பது பழைய அரமேய மொழியில் எழுதப்பட்ட, கி.மு. 9-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஒரு கல் பலகைக் கல்வெட்டு ஆகும். இது தாவீது ராஜாவின் வம்சம் இருந்ததற்கான, விவிலியம் சாராத, மிகப் பழமையான சான்றை வழங்குகிறது.

இதில் பழைய அரமேய மொழியில் "BYTDWD" என்ற வார்த்தைகள் உள்ளன, இதன் பொருள் "தாவீதின் வம்சம்" என்பதாகும். இந்தக் கல்வெட்டு, ஒரு அரமேய ராஜாவால் (தமஸ்குவின் ஹசயேலாக இருக்கலாம்) எழுப்பப்பட்ட ஒரு வெற்றி நினைவுச்சின்னமாக விளங்குகிறது. இது இஸ்ரேல் ராஜாக்களையும் தாவீதின் வம்சத்தையும் தோற்கடித்ததைப் பறைசாற்றுகிறது. இது, அந்தக் காலகட்டத்தில் யூதாவில் அங்கீகரிக்கப்பட்ட ஒரு ஆளும் வம்சத்தை நிறுவியவர் தாவீது ராஜா என்பதை உணர்த்துகிறது.

இந்தக் கற்பலகையில் குறிப்பிடப்பட்டுள்ள அரசர்களின் தோல்வி, இரண்டாம் அரசர்கள் புத்தகத்தில் (2 இராஜாக்கள் 8–9) விவரிக்கப்பட்டுள்ளது.

தாவீதின் அரச வம்சம் இருந்தது என்பதற்கு இது சுயாதீனமான தொல்பொருள் சான்றுகளை வழங்குகிறது.

**இது போன்ற தொல்பொருள் கண்டுபிடிப்புகள், பைபிளின் நம்பகத்தன்மைக்கு சான்றளிக்கின்றன.**

**இந்த கவனத்தை ஈர்க்கும் புத்தகத்தைப் படிக்க உங்களுக்கு ஆர்வமாக இல்லையா?பரிசுத்த வேதாகமம் வாசித்து, தேவன் உங்களுக்கு என்ன சொல்ல விரும்புகிறார் என்பதைக் கண்டறியுமாறு உங்களை அன்புடன் அழைக்கிறோம்.**



### உங்களுக்கு தெரியுமா?

இஸ்ரவேலின் நியாயாதிபதிகளில் ஏகூத் தனித்துவமானவர், ஏனெனில் அவர் இடது கை பழக்கம் உடையவர், இது அவர் தனது வலது தொடையில் ஒரு கத்தியை மறைத்து வைத்து, எக்லோன் ராஜாவைக் கொல்ல உதவியது (நியாயாதிபதிகள் 3:15-21).



### உங்களுக்குத் தெரியுமா?

இஸ்ரவேலை வழிநடத்திய அனைத்து நியாயாதிபதிகளில், தெபொராள் மட்டுமே பெண் நியாயாதிபதியாகவும் தீர்க்கதரிசியாகவும் வேதாகமத்தில் பதிவாகியுள்ளார் (நியாயாதிபதிகள் 4:4).



சிறுபிள்ளையைப் போல விசுவாசம் உள்ளவர்களாக இருப்பதை வேதாகமத்தைப் பற்றிய சிறுபிள்ளைத்தனமான சிந்தனையுடன் ஒருபோதும் குழப்பிக் கொள்ளாதீர்கள். - மெக்ஆர்தர்

# GODependence சமூக ஊடக தளங்கள்

## GODependence YouTube Channel

GODependence தமிழ் சேனல் 1.3K சந்தாதாரர்களையும் 291 வீடியோக்களையும் எட்டியுள்ளது .

CLICK HERE https://youtube.com/@godependencetamil







## GODependence WhatsApp Channel

இது தமிழில் GODependence இன் அதிகாரப்பூர்வ whatsapp சேனல்.

தினமும் வேதாகமம், வேதவாசிப்பு குறித்த மேற்கோள்கள் மற்றும் அவ்வப்போது வேதவாசிப்பு சவால்கள் குறித்த மற்றும் பிற அறிவிப்புகள் பெற விரும்பினால், நமது தமிழ் சானலை follow பண்ணுங்கள்... நன்றி.




CLICK HERE https://whatsapp.com/channel/0029Va8tCqzC6ZvpLu3JBj3R

## GODependence வேதவாசிப்பு சவால்கள் தொடர்பு எண்கள்:

பல்வேறு மொழிகளில் நடைபெறும் வேத வாசிப்பு சவால்களுக்காக GODependence பின்வரும் தொடர்பு எண்களை பயன்படுத்துகிறது.

நீங்கள் எந்த மொழியில் வேதவாசிப்பு சவாலில் சேர விரும்புகிறீர்களோ, அதற்குரிய எண்ணில் தொடர்பு கொண்டு குழுவில் சேரலாம்.

- தமிழ் - +965 6596 2559
- ஆங்கிலம் - +91 95255 95265
- பிற மொழிகள் - +91 99628 34944

தேவனுடைய வார்த்தைக்கு வரும் வழி இதுதான்.தேவன் உங்களுக்கு எழுதிய அன்பின் கடிதம் என்று கருதி பரிசுத்த வேதாகமத்தை நீங்கள் வாசிக்க வேண்டும். - ஹோவர்ட் ஜி. ஹெண்ட்ரிக்ஸ்

# GODependence வேத வாசிப்பு சவால்கள்

**31 March 2026 அன்றுடன் முடிவடைந்த GODependence வேதவாசிப்பு சவால்களில் வெற்றிகரமாக வேதாகமத்தை வாசித்து முடித்தவர்கள்**



## GODependence Bible Reading Challenges

Congratulations to the Successful Participants as on 31 March 2026

### 1 Month Bible Reading Challenge

- J. Unicy
- Mrs. Clara
- R Padmavathi
- R. Amuthaselvi Juliance
- Shunmugiah. M

Congratulations!

GODependence +965 6596 2559

Prize & Certificate will be send to them in due time

## GODependence Bible Reading Challenges

Congratulations to the Successful Participants as on 31 March 2026

### 2 Months Bible Reading Challenge

- Helen Mercy. D
- Josephine Jeya Amos
- J R Anisha
- Kumari A
- S. Sweetlin Jeba

Congratulations!

GODependence +965 6596 2559

Prize & Certificate will be send to them in due time

## GODependence Bible Reading Challenges

Congratulations to the Successful Participants as on 31 March 2026

### 3 Months Bible Reading Challenge

- D Esther Annal
- Josephine Jeya Amos
- Marine Phelsia
- R. Shirley Gainneos
- Sherine Ranjit
- Beaulah Enoch
- Blessiya R
- C Kkumutha
- D. Jeslin
- Hebsi Willingston
- Mrs. Vashita Israel
- S. Jasmine
- Muthukumar M
- P. Joice
- RACHEL. G
- Rani Vanitha
- S. JesiJeevaratnam
- Sam W
- T. JACQULINE ESTHER
- VINOTH REXIN RAJ
- எஸ். பிரேமா வசந்த ராணி..
- ஜா. திகந்த்
- ஜெனிபா கோல்டு
- Kavita Rajendra bramhane

Congratulations!

GODependence +965 6596 2559

Certificate will be send to them in due time

## GODependence Bible Reading Challenges

Congratulations to the Successful Participants as on 31 March 2026

### 4 Months Bible Reading Challenge

1. Valarmathy Jeyaraj

Congratulations!

GODependence +965 6596 2559

Certificate will be send to them in due time

## GODependence Bible Reading Challenges

Congratulations to the Successful Participants as on 31 March 2026

### 6 Months Bible Reading Challenge

- Anita Aadarsh
- Brigida S
- A. Gnanaselvi
- A. Deepa
- Arockia Mary Anita. E
- GODVILDAS. Y
- J Selvarani perinbam
- S. Kala
- W.Martha Remila

Congratulations!

GODependence +965 6596 2559

Certificate will be send to them in due time

## GODependence Bible Reading Challenges

Congratulations to the Successful Participants as on 31 March 2026

### 1 Year Bible Reading Challenge

1. Benedict Anto Rathnam
2. Dhinakaran K
3. Samrajesh Mault
4. Agnes C
5. CRISANCIA ANIE P
6. I R EBENEZER SUNDARSINGH
7. Raichel Amuthavalli
8. RAJMOHAN D E E
9. Pricilla Annapoorani

Congratulations!

GODependence +965 6596 2559

Certificate will be send to them in due time

... கிறிஸ்துவானவர் வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்து, அடக்கம்பண்ணப்பட்டு, வேதவாக்கியங்களின்படி மூன்றாம்நாளில் உயிர்த்தெழுந்து, ... - 1 கொரிந்தியர் 15:3-4

# GODependence வேத வாசிப்பு சவால்கள்

GODependence சிறப்பு வேதவாசிப்பு சவால்களில்
வெற்றிகரமாக வேதாகமத்தை வாசித்து முடித்தவர்கள்

## GODependence
### LENTEN BIBLE READING CHALLENGE 2026
**Successful Participants - Page 1**

- T. SALOMI SAKUNTHALA RANI
- A. Jency
- A. Jane Sheela Chandravadani
- A. MABEL
- A. Mary Dickson
- A. Ranidevasena
- Abarna G
- Abirami Ravichandran
- Amutha Issac
- Anasuya
- Anitha Delvis
- ANTONY CHRISTINA A
- Antony Immaculate.L
- Anushiya Vijay Dev
- Arockia Mary Anita. E
- Beulah Ponmalar M
- C. Veerammal
- C. VIJITHA
- Hubert Subinraj
- ஜா.வளர்மதி
- G. Esther Jaya
- D Esther Annal
- D. ELIZABETH
- D. Renuka
- Devamani Rajam. P
- Dr. Elin Easter
- E. Kiruba
- Evangline Esther
- Florence G
- Gifta Arumainayagam
- GRACELIN D V
- Hebsi Willingston
- Hepciba E
- I GRACE JENIS GNANAM
- J Samson
- J. Juliet

Congratulations!

GODependence +965 6596 2559

Appreciation Certificate & Prize (for those eligible) will be sent to them in due time

## GODependence
### LENTEN BIBLE READING CHALLENGE 2026
**Successful Participants - Page 2**

- Jacinth. V
- Jemima. S
- Jenitha S
- Jessie Joseph
- Jesu Muthuraj
- Rev. Satya Ranjan Soren
- Esther Stephen
- J. Mary Vanaja
- Joses Praveen
- K. Ledialkingsly
- M John Flora
- M. Robinson
- Mallika Christopher
- Marry
- MR K RAJAMANI
- Mrs. L. Tamilarasi
- Mrs. Pushparani
- Mrs. J. Belinda Augustin
- NISHA DHARMARAJAN
- P S Johnson Thangaraj
- P. Pamilla Jean
- P. Jeevitha
- P. Santhiya
- Paul Chandra Raja G J
- R Meenal
- R. Jancy Rani
- Rachel Rinna Segaran
- RACHEL. G
- Rani Henry
- Jenitha. S
- V. Angel
- Deepa Theodore
- REV. G. MARIADOSS
- Rosemary Thankanadar
- S. Selvi
- S. Arul

Congratulations!

GODependence +965 6596 2559

Appreciation Certificate & Prize (for those eligible) will be sent to them in due time

## GODependence
### LENTEN BIBLE READING CHALLENGE 2026
**Successful Participants - Page 3**

- S. Jasmine
- S. Jesi Jeevaratnam
- S. Jecintha
- S. Leelavathy
- Shalom S
- Shirley Sagayam
- STANLEY GNANARAJ D
- Sudha C
- Sujitha
- Sumati Singh
- T. Premala Kumari
- Thampi Godson Kumar
- Vijaya Jacob
- VINCY LYDIA D
- Y. Jacob Raju
- S. Daniel
- S. Nithya
- Shanthi Sankaran
- பெத்து லஷ்மி .M
- வயலட் சபீனா பாண்டி
- A. David Sankaran
- Stelin Martin
- Mrs. Smieslin Selvam
- S. Viji selvin
- Jensi priya David
- Y.Blessy Jenifa Ponnuraj
- M.MANICKADURAI
- Esther Bhuvana
- R.. Vimala Gracy
- P.Amutha Prabhu
- Viji Pillai
- Rani. k. p. M.
- Dr.K.Sangeetha
- சுகந்தி
- Sugandhi Rajkumar
- Sugandhi

Congratulations!

GODependence +965 6596 2559

Appreciation Certificate & Prize (for those eligible) will be sent to them in due time

## GODependence
Conducts
### RAMADAN BIBLE READING CHALLENGE 2026
**Successful Participants**

- Balajeyarani Jeyakumar
- Beula Rajan
- P. Rajasingh
- J. M. Simi
- Shoba Daniel
- M John Flora
- R. Tamil Selvi
- MS VINOLIYA R
- D. Devachristy
- Devamani Rajam. P
- Pauline Mariasundaram

Congratulations!

GODependence +965 6596 2559

Prize & Appreciation Certificate will be send to them in due time

பரிசுத்த வேதாகமம் சொல்லும் வார்த்தை தேவனுடைய வார்த்தை ஆகும். - பெஞ்சமின் வர்ஃபீல்ட்

# விளையாடுவோம் வேதாகம விளையாட்டு - 18

குறிப்பு : பதில்கள் அனைத்தும் வசன ஆதாரத்துடன் இருக்க வேண்டும். வேதாகமத்தைப் பார்த்துக் கண்டுபிடிக்கலாம்.

**வேதப்பகுதி: எபிரேயர்**

1



2



3




4



5




6



7



8




9




10



https://forms.gle/Syd748sCDotqYwfj9

- மேலே கொடுக்கப்பட்ட இணைப்பை கிளிக் செய்து சரியான பதிலை 30/04/2026 க்கு முன்பதாக அனுப்பவும்.
- சரியான பதில் அனுப்பும் முதல் 10 நபர்களுடைய பெயர்கள் அடுத்த மாத இதழில் குறிப்பிடப்படும்.

## கடந்த மாத இதழில் விளையாடுவோம் வேதாகம விளையாட்டு - 17மற்றும் வேதாகம குறுக்கெழுத்துப் புதிர் - 17 தீத்து & பிலேமோன்-இல் பங்கு பெற்று சரியான பதில்களை அனுப்பிய நபர்களின் பெயர்கள்

**வேதாகம குறுக்கெழுத்துப் புதிர்: 17**

1. காயத்திரி இவாஞ்சலின்
2. கிறிஸ்டி ஜோசப்
3. N. மேரி-ஆக்னஸ்
4. டி.சலோமி சகுந்தலா ராணி
5. கிருபா ஜான்சன்
6. ஆர். தமிழ்செல்வி
7. ரூபி ஜெனட்
8. அமுதா ஜெகன்
9. எஸ்தர் ஸ்டீபன்
10. டி. ரேணுகா

**விளையாடுவோம் வேதாகம விளையாட்டு - 17**

- கிறிஸ்டி ஜோசப்
- ஆர். தமிழ்ச்செல்வி
- டி.சலோமி சகுந்தலா ராணி
- டி. ரேணுகா
- அமுதா ஜெகன்

தேவனுடைய வார்த்தையை வாசித்து, ஜெபம் செய்து தேவனுடன் நேரம் செலவிடவேண்டும் என்று நீங்கள் தீர்மானிக்கும்போது, பொறுமையும் அதைச் செய்வதற்கான சக்தியும் மிகவும் முக்கியமானது ஆகும். - பாலின் கிரீடன்

# பதில்கள்

**கடந்த மாத இதழில் விளையாடுவோம் வேதாகம விளையாட்டு - 17 மற்றும் வேதாகம குறுக்கெழுத்துப் புதிர் - 17 தீத்து & பிலேமோன்-இல் கேட்கப்பட்ட வினாக்களுக்கான சரியான பதில்கள்**

### வேதாகம குறுக்கெழுத்துப் புதிர்: 17

**இடமிருந்து வலம்**

2. புத்தி (தீத்து 1:9)
4. எப்பாப்பிரா (பிலேமோன் 23)
10. அசட்டை (தீத்து 2:15)

**வலமிருந்து இடம்**

1. தீத்து (தீத்து 1:1)
11. ஒநேசிமு (பிலேமோன் 10)
14. பொய்யர் (தீத்து1:12)

**மேலிருந்து கீழ்**

3. கிரேத்தா (தீத்து 1:5)
5. பாக்கியம் (தீத்து 2:13)
6. பிலேமோன் (பிலேமோன் 7)
7. தேவகிருபை (தீத்து2:11)
8. சேனா (தீத்து 3:13)

**கீழிருந்து மேல்**

9. அவபக்தி (தீத்து 2:12)
10. அர்க்கிப்பு (பிலேமோன் 2)
12. சாந்தகுணம் (தீத்து 3:2)
13. மாரி (தீத்து 3:12)
15. பவுல் (தீத்து 1:1)

### விளையாடுவோம் வேதாகம விளையாட்டு - 17

1). தீத்து : 1 - 4
2) .தீத்து : 1 - 15
3)..தீத்து : 1 - 16
4). தீத்து : 2 - 14
5). தீத்து : 2 - 1
6). பிலோமோன் : 1 - 1
7). பிலோமோன் : 1 - 20
8). தீத்து : 3 - 5
9). தீத்து : 2 - 7
10). தீத்து : 3 - 14

## ஆசிரியர் குழு

- பேதுரு தேவதாசன்
- அற்புதராஜ் சாமுவேல்
- ஜோ. இ. ஆ. ஈஸ்டர் ராஜ்
- ஏ. ஆர். பீட்டர்
- டெ. டென்சிங்
- டார்வின் நேசகுமார் அ
- ஷோபா தானியேல்
- ஜோசஃபீன் ஷைனி பால்
- கேதரின் சுஜி

நாம் ஆவிக்குரிய எழுப்புதல்களைக் காண விரும்பினால், தேவனுடைய வார்த்தை மீதான நம் பயபக்தியை நாம் உயிரோட்டமுள்ளதாக மாற்ற வேண்டும். - சார்லஸ் ஸ்பர்ஜன்

# எபிரெயர்

**எழுதப்பட்ட காலம் :** கி.பி 67- கி.பி 69
**நிகழ்வுகள் நடைபெற்ற காலம் :** கி.பி. 66
**நூலின் ஆசிரியர்:** அறியப்படாதவர்
**புத்தக வகை :** கடிதங்கள்

## நூல் அறிமுகம்

- பவுலுடன் தொடர்புப்படுத்தப்படும் இறுதியான கடிதம் இந்த எபிரெயர் கடிதம். இது ஒரு கடிதம் என வழங்கப்பட்டாலும், இதில் கடித அமைப்பு இல்லை. மாறாக ஓர் இறையியல் கட்டுரையாகவே இது அமைந்துள்ளது. நூலின் இறுதியில் மட்டும் வாசகர்களுக்கு அறிவுரைகள் தரப்பட்டுள்ளன.

## சூழலும் நோக்கமும்

- மறைந்த டாக்டர். வால்டர் மார்ட்டின் என்னும் இறையியலாளர், எபிரெயரின் புத்தகம் மற்ற எபிரெயர்களுக்காக ஒரு எபிரேயரால் எழுதப்பட்டது என்று கூறினார். உண்மையில், ஆரம்பகால யூத விசுவாசிகளில் பலர் பெருகிவரும் துன்புறுத்தலில் இருந்து தப்பிப்பதற்காக யூத மதத்தின் சடங்குகள் மற்றும் சடங்குகளில் மீண்டும் நுழைந்தனர். இந்த கடிதம் துன்புறுத்தப்பட்ட அந்த விசுவாசிகள் இயேசு கிறிஸ்துவின் கிருபையில் தொடர எழுதப்பட்ட ஒரு அறிவுரையாகும்.
- இக்கடிதம் யூதக் கிறிஸ்தவர்களுக்கு எழுதப்பட்டதாகும். இரட்சிக்கப்பட்ட யூதர்கள் பழைய ஏற்பாட்டில் தோய்ந்தவர்கள், அவர்கள் தங்கள் நம்பிக்கையில் தளர்ச்சி ஏற்பட்டு, நம்பிக்கையை இழந்துவிடக்கூடிய ஆபத்தில் இருந்தவர்கள். அவர்கள் கிறிஸ்தவ நம்பிக்கையில் உறுதியாய் நில்லாமல் மீண்டும் யூதச் சமயத்திற்குத் திரும்ப நினைத்தார்கள். தாங்கள் பெற்றுக் கொண்ட நற்செய்தியை யூதமயமாக்க விரும்பினார்கள் (கலா 2:14). இந்த வாசகர்களில் பலர் கிறிஸ்துவை ஏற்றுக் கொண்ட யூதக் ஆசாரியர்களாகவும் இருந்தனர் (அப் 6:7). எனவே எபிரெயர்கள் எபிரெயர்களைப் போல் செயல்படுவதை நிறுத்த வேண்டும் என்ற நோக்கில் இக்கடிதம் எழுதப்பட்டது.

## முக்கிய வசனங்கள்

எபி 1:1-2, எபி 2:3, எபி 4:14-16, எபி 11:1, எபி 12:1-2

## புத்தகத்தின் சுருக்கம்

- எபிரெயர்களின் புத்தகம் மூன்று தனித்தனி குழுக்களைக் குறிப்பிடுகிறது: 1) கிறிஸ்துவில் விசுவாசிகள், 2) கிறிஸ்துவின் சத்தியங்களை அறிந்த அறிவார்ந்த ஏற்புடைய விசுவாசிகள் 3) கிறிஸ்துவிடம் ஈர்க்கப்பட்ட ஆனால் இறுதியில் அவரை நிராகரித்த அவிசுவாசிகள். எந்தப் பத்தியில் எந்தக் குழுவுக்கு உரையாற்றப்படுகிறது என்பதைப் புரிந்துகொள்வது முக்கியம். அவ்வாறு செய்யத் தவறினால் வேதத்தின் மற்ற பகுதிகளுக்கு முரணான முடிவுகளை நாம் எடுக்க நேரிடும். எபிரெய எழுத்தாளர், கிறிஸ்துவின் ஆளுமை மற்றும் அவரது ஊழிய வேலை இரண்டிலும் கிறிஸ்துவின் மேன்மையை தொடர்ந்து குறிப்பிடுகிறார்.
- பழைய ஏற்பாட்டின் எழுத்துக்களில், யூத மதத்தின் சடங்குகள் மேசியாவின் வருகையை அடையாளமாக காட்டின. அதாவது யூத மதத்தின் சடங்குகள் வரவிருக்கும் விஷயங்களின் நிழல்களாக இருந்தன. கிறிஸ்துவின் மேன்மையே இந்நூலின் மையக் கருத்தாகும். முன்னுரையில் கிறிஸ்து முழுமையான, முடிவான வெளிப்பாட்டைத் தருகிறார் எனக் கூறப்பட்டுள்ளது. தேவதூதருக்கும் பழைய உடன்படிக்கையின் இணைப்பாளரான மோசேக்கும் மேலானவராகக் கிறிஸ்து காட்டப்படுகிறார். கிறிஸ்துவின் ஆசாரியத்துவம் பழைய ஏற்பாட்டுக் ஆசாரியத்துவத்தினின்று முற்றிலும் மாறுபட்டதும் அதற்கு மேம்பட்டதுமாகும் என சுட்டிக்காட்டப்படுகிறது. ஏனெனில் கிறிஸ்துவின் ஆசாரியத்துவம் பழைய ஏற்பாட்டின் வாக்குறுதியை நிறைவு செய்கிறது (8: 1-13), கிறிஸ்துவின் பலியும் எக்காலத்துக்கும் உரிய ஒரே பலியாய் விளங்கி, பழைய ஏற்பாட்டுப் பலிகளை நிறைவு செய்கிறது. கிறிஸ்துவின் மரணம், உயிர்த்தெழுதல், பரமேறுதல் ஆகியன விண்ணகத் தூயகத்தை நமக்குத் திறந்து வைத்துள்ளன என்னும் கருத்துக்கள் வலியுறுத்தப்படுகின்றன. இத்தகைய காரணங்களினால், கிறிஸ்துவின் மீது விசுவாசம் கொண்டோர் கிறிஸ்துவை விட்டு மீண்டும் யூத முறைக்குத் திரும்பலாகாது என்று ஆசிரியர் கேட்டுக்கொள்கிறார். அவ்வாறு செய்தால் பாலைவனத்தில் கலகம் செய்த இஸ்ரவேலர் போல் இவர்களும் தண்டிக்கப்படுவார்கள் என எச்சரிக்கை விடுக்கிறார்.

## புத்தகத்தில் இயேசுகிறிஸ்து

- லேவிய ஆசாரியத்துவத்தை அடித்தளமாகக் கொண்ட எபிரெயர் புத்தகத்தை விட, புதிய ஏற்பாட்டில் எங்கும் பழைய ஏற்பாட்டில் கவனம் செலுத்தப்படவில்லை. எபிரெயருக்கு எழுதுபவர், பழைய ஏற்பாட்டு பலியிடும் முறையின் போதாமைகளை இயேசு கிறிஸ்துவின் பரிபூரணத்திற்கும் நிறைவுக்கும் ஒப்பிடுகிறார்.
- பழைய உடன்படிக்கைக்கு தொடர்ச்சியான பலிகள் மற்றும் ஒரு மனித ஆசாரியரால் வழங்கப்படும் பாவத்திற்கு வருடத்திற்கு ஒருமுறை பரிகாரம் ஆகியவை தேவைப்பட்டது. ஆனால் புதிய உடன்படிக்கைக்கு இயேசு கிறிஸ்துவின் மூலம் அனைவருக்குமான ஒரே முறை பலி செலுத்தப்பட்டது (எபி 10:10). தேவனின் சிம்மாசனத்திற்கு நேரடி அணுகல் என்பது அவருக்குள் இருக்கும் அனைவருக்கும் வாக்களிக்கப்படுகிறது.

## நடைமுறைப் பயன்பாடு

- எபிரெயர் புத்தகம் தேவனின் "விசுவாச நாயகர்களின்" ஊக்கமளிக்கும் உதாரணங்களை நமக்குத் தருகிறது. அவர்கள் மிகுந்த சிரமங்கள் மற்றும் பாதகமான சூழ்நிலைகளுக்கு மத்தியிலும் விடாமுயற்சியுடன் இருந்தனர் (எபி 11). அவ்வாறே, அவருடைய பழைய ஏற்பாட்டு பரிசுத்தவான்களின் பாறை போன்ற திடமான விசுவாசத்தைப் பற்றி தியானிப்பதன் மூலம், நம்முடைய சூழ்நிலைகளைப் பொருட்படுத்தாமல் தேவனின் ஐசுவரியமான வாக்குறுதிகளில் நாமும் முழுமையான நம்பிக்கையைப் பேணலாம்.
- எபிரெய எழுத்தாளர் விசுவாசிகளுக்கு போதிய ஊக்கத்தை அளிக்கிறார், ஆனால் நாம் கவனிக்க வேண்டிய ஐந்து முக்கியமான எச்சரிக்கைகள் உள்ளன. 1) புறக்கணிப்பின் ஆபத்து (எபி 2:1-4) 2) அவிசுவாசத்தின் ஆபத்து (எபி 3:7-4:13) 3) ஆன்மீக முதிர்ச்சியின் ஆபத்து (எபி 5:11-6:20) 4) தோல்வியின் ஆபத்து (எபி 10:26-39) 5) தேவனுக்கு செவிகொடுக்காமலிருக்கும் ஆபத்து (எபி 12:25-29).

## நூலின் அமைப்பு

1) முன்னுரை; தேவன் தம் மகன் முலமாக நம்மிடம் பேசியுள்ளார். 1:1 - 3
2) தேவகுமாரன் தேவதூதரைவிட மேலானவர் 1:4 - 2:18
3) இயேசு கிறிஸ்து மோசேக்கும் யோசுவாவுக்கும் மேலானவர் 3:1 - 4:3
4) இயேசு கிறிஸ்துவின் ஆசாரியத்துவத்தின் மேன்மை 4:14 - 7:28
5) இயேசு கிறிஸ்துவின் உடன்படிக்கையின் மேன்மை 8:1 - 9:28
6) இயேசு கிறிஸ்து பலியின் மேன்மை 10:1 - 31
7) விசுவாசத்தின் மேன்மை 11:1 - 12:29
8) தேவனுக்கு உகந்த வாழ்க்கை 13:1 - 19

GODDependence
தொகுப்பு: சகோ. டார்வின் நேசகுமார் ஏ.

ஆசிரியர் அதன் வாசகரோடு அன்பாக இருக்கும் ஒரே புத்தகம் பரிசுத்த வேதாகமம் மட்டுமே ஆகும்.

# மலையாள வேதாகமத்தின் வரலாறு

**(Dr. ஜேக்கப் சாமுவேல்)**

### கேரளாவில் ஆரம்பகால கிறிஸ்தவம்




கிறிஸ்தவம் பல நாடுகளை அடைவதற்கு மிக முன்பாகவே, பல நூற்றாண்டுகளாக கேரளாவில் இருந்து வந்துள்ளது என்பதை நாம் அறிவோம். ஆரம்ப காலங்களிலிருந்தே கேரளாவில் கிறிஸ்தவத்தின் இருப்பு பிரசன்னம் இருந்து வந்தது. இருப்பினும், அந்த ஆரம்ப நாட்களில் பயன்படுத்தப்பட்ட வேதாகமம் சிரியாக் வேதாகமமாகும். ஆராதனைகளில் வாசிக்கப்பட்ட வேதவசனங்கள் சிரியாக் மொழியில் இருந்தன. சாதாரண மக்களுக்கு சிரியாக் மொழி தெரியாது, அது ஒரு சில பாதிரியார்களுக்கு மட்டுமே தெரிந்திருந்தது. ஆகவே, சிரியாக் வேதாகமம் இருந்தபோதிலும், அது பொது மக்களுக்கு பெரிதாக பயனளிக்கவில்லை.

### கிளாடியஸ் புக்கானனும் (Claudius Buchanan) முதல் மொழிபெயர்ப்பு முயற்சியும்

வேதாகமத்தை மலையாளத்தில் மொழிபெயர்க்கும் முயற்சியைத் தொடங்கி வைத்த புராட்டஸ்டன்ட் மிஷனரி, இங்கிலாந்தைச் சேர்ந்த சர்ச் மிஷனரி சொசைட்டியின் (CMS) மிஷனரியான கிளாடியஸ் புக்கானன் ஆவார். கல்வியை மேம்படுத்துவதிலும், வேதவசனங்களை தாய்மொழிகளில் மொழிபெயர்ப்பதிலும் அவர் ஆழ்ந்த அக்கறை கொண்டிருந்தார்.

கேரளாவில் ஒரு கிறிஸ்தவ சமுதாயம் இருப்பதையும், அவர்களிடம் அவர்களின் மொழியில் வேதாகமம் இல்லை என்பதையும் அவர் அறிந்திருந்தார். Kandanad-ல் உள்ள சிரியன் சபையின் பிஷப்பான மார் தியோனீசியசை (Mar Dionysius) அவர் சந்தித்து, சிரியாக் வேதாகமத்தை மலையாளத்தில் மொழிபெயர்க்கும் திட்டம் குறித்து விவாதித்தார். பிஷப் அவர்களும் இதற்கு ஆதரவாக இருந்தார். மொழிபெயர்ப்புப் பணி காயங்குளத்தைச் சேர்ந்த பிலிப்போஸ் ரம்பான் (Philipose Ramban) என்னும் சிரியன் பாதிரியாரிடம் ஒப்படைக்கப்பட்டது. திமப்பா (Thimappa) என்ற தமிழ்-மலையாள அறிஞர் உள்ளிட்ட பிற அறிஞர்களின் உதவியுடன், முதலில் நான்கு சுவிசேஷங்கள் மொழிபெயர்க்கப்பட்டன. அவை மும்பையில் அச்சிடப்பட்டு கேரளாவுக்கு அனுப்பப்பட்டன. இதுவே *ரம்பான் வேதாகமம்* (Ramban Bible) என்று அறியப்பட்டது (19ஆம் நூற்றாண்டின் முற்பகுதி).

### பெஞ்சமின் பெய்லி (Benjamin Bailey)

1816 இல் கேரளாவுக்கு வந்த பெஞ்சமின் பெய்லி, மலையாளம், சமஸ்கிருதம் மற்றும் சிரியாக் மொழிகளைக் கற்று, வேதாகமத்தை மலையாளத்தில் மொழிபெயர்க்க வேண்டும் என்ற வலுவான விருப்பம் கொண்டிருந்தார். கேரளாவின் முதல் அச்சகமான CMS அச்சகத்தை அவர் கோட்டயத்தில் நிறுவினார். அவர் முதலில் புதிய ஏற்பாட்டையும், பின்னர் பழைய ஏற்பாட்டையும் மொழிபெயர்த்தார். முழுமையான மலையாள வேதாகமம் 1841 இல் வெளியிடப்பட்டது. அவர் மூல மொழிகளைக் குறிப்பிட்டிருந்தாலும், அவரது மொழிபெயர்ப்பின் பெரும்பகுதி ஆங்கிலம் மற்றும் சிரியாக் மூலங்களை நம்பியே இருந்தது.

### ஹெர்மன் குண்டர்ட் (Hermann Gundert)

பண்டிதரும், மொழியியலாளரும், பாசெல் எவாஞ்சலிக்கல் மிஷனின் மிஷனருமான ஹெர்மன் குண்டர்ட், 1839 இல் தலச்சேரியில் வந்திறங்கினார். அவர் எபிரேயம், கிரேக்கம், ஜெர்மன், ஆங்கிலம், சமஸ்கிருதம், இந்துஸ்தானி உள்ளிட்ட பல மொழிகளில் தேர்ச்சி பெற்றவர். பெய்லியின் மொழிபெயர்ப்பு மிகவும் பேச்சுவழக்கில் இருப்பதாகவும், மேற்கத்திய மரபுத்தொடர்கள் மற்றும் சிரியாக் வெளிப்பாடுகளால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் விமர்சிக்கப்பட்டது. அது வட கேரளாவில் (மலபார்) முழுமையாக ஏற்றுக்கொள்ளப்படவில்லை. எனவே, குண்டர்ட் வேதாகமத்தை நேரடியாக மூல கிரேக்க மற்றும் எபிரேய மொழிகளிலிருந்து மொழிபெயர்த்தார். முழு வேதாகமமும் 1859 இல் நிறைவுபெற்று, பெங்களூரில் உள்ள பாசெல் மிஷன் அச்சகத்தில் அச்சிடப்பட்டது. இது மலபாரில் பரவலாகப் பயன்படுத்தப்பட்டது.

மரித்துப் போன ஆத்துமாக்களை உயிர்பெறச் செய்வதற்கு பரிசுத்த ஆவியானவர் பயன்படுத்தும் மாபெரும் கருவி தேவனுடைய வார்த்தை. - டி.எல் மூடி

### "சத்யவேதபுஸ்தகம்" (1910)

திருவிதாங்கூர், கொச்சி மற்றும் மலபாரில் பயன்படுத்தக்கூடிய ஒரு பொதுவான பதிப்பை உருவாக்க, 1871 இல் வேதாகம சொசைட்டியின் மெட்ராஸ் துணைக்குழு ஒரு கமிட்டியை நியமித்தது. CMS, LMS, பாசெல் மிஷன் மற்றும் சிரியன் சபையின் பிரதிநிதிகள் இதில் பங்கேற்றனர். கிரேக்க மற்றும் எபிரேய மூலப் பிரதிகள், பெய்லி மற்றும் குண்டர்ட்டின் பதிப்புகள் மற்றும் பிற மூலங்களைப் பயன்படுத்தி, அவர்கள் ஒரு ஒருங்கிணைந்த மொழிபெயர்ப்பை உருவாக்கினர்.

1910 ஆம் ஆண்டில், *சத்யவேதபுஸ்தகம்* என்ற தலைப்பில் முழுமையான மலையாள வேதாகமம் வெளியிடப்பட்டது. இது அக்காலம் வரையிலான மலையாள மொழியின் வளர்ச்சியையும் முன்னேற்றத்தையும் பிரதிபலித்தது மற்றும் பரவலாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. அச்சுச் செலவை பிரிட்டிஷ் அண்ட் ஃபாரின் பைபிள் சொசைட்டி ஏற்றுக்கொண்டது.

### "ஆதுனிக விவர்த்தனம்" (நவீன மொழிபெயர்ப்பு - 2013)

மொழி காலப்போக்கில் மாறுகிறது. பழைய பதிப்பில் உள்ள பல வெளிப்பாடுகள் (expressions) வழக்கொழிந்து போயின. எனவே 2013 இல், வேதாகம சொசைட்டி ஒரு திருத்தப்பட்ட நவீன மலையாளப் பதிப்பை வெளியிட்டது.

### அதன் சிறப்பம்சங்கள்:

- பொதுவான மலையாள மொழியைப் பயன்படுத்துதல்
- "யாவே" என்பதற்குப் பதிலாக "சர்வேஸ்வரன்" என்று மாற்றியமைத்தல்
- கடவுளைக் குறிப்பிடும்போது "அவன்" அல்லது "நீ" என்பதற்குப் பதிலாக "அங்கு", "அவிடுன்னு" போன்ற மரியாதைக்குரிய சொற்களைப் பயன்படுத்துதல்

இருப்பினும், இந்த நவீன பதிப்பு பெரிய அளவில் பிரபலமடையவில்லை. ஒருவேளை மக்கள் தாங்கள் வளர்ந்து படித்த பதிப்பின் மீது பற்றுதல் கொண்டிருப்பதே இதற்குக் காரணமாக இருக்கலாம். ஆயினும், முதன்முறையாக வாசிப்பவர்கள், இளைஞர்கள் அல்லது கிறிஸ்தவர் அல்லாதவர்களுக்கு இது மிகவும் கவர்ச்சிகரமானதாக இருக்கலாம்.

### பிற புராட்டஸ்டன்ட் மொழிபெயர்ப்புகள்

- 1997 இல், சர்வதேச வேதாகம சொசைட்டி (தற்போது பிப்ளிகா) ஒரு மலையாளப் பதிப்பை வெளியிட்டது.
- பைபிள் லீக் இன்டர்நேஷனல் ஒரு "எளிதில் வாசிக்கக்கூடிய பதிப்பை" வெளியிட்டது.
- டாக்டர் மேத்யூஸ் வர்கீஸ் "விசுத்த சத்யவேதபுஸ்தகம்" என்பதை வெளியிட்டார்.
- இந்திய திருத்தப்பட்ட பதிப்பு மலையாளம் பின்னர் வெளியிடப்பட்டது.
- 2021 இல், பிப்ளிகா ஒரு "சமகால மலையாள மொழிபெயர்ப்பை" வெளியிட்டது.

பல பதிப்புகள் இருந்தாலும், வேதாகம சொசைட்டியின் பிரசுரங்களே மிகவும் பரவலாகப் பயன்படுத்தப்படுகின்றன.

### கத்தோலிக்க மொழிபெயர்ப்புகள்

கத்தோலிக்கர்களும் மொழிபெயர்ப்பு முயற்சிகளை மேற்கொண்டனர்:

- 1905: மஞ்சும்மேலைச் சேர்ந்த மூன்று பாதிரியார்கள் சுவிசேஷங்களையும் அப்போஸ்தலர் நடபடிகளையும் லத்தீன் மொழியிலிருந்து மொழிபெயர்த்தனர்.
- 1940: முழுமையான புதிய ஏற்பாடு வெளியிடப்பட்டது (Manjummel Bible).
- 1963: மான்சிஞ்ஞோர் தாமஸ் முத்தேடனின் (Monsignor Thomas Muthhedan) முழு வேதாகம மொழிபெயர்ப்பு.
- 1981: POC வேதாகமம் (அதிகாரப்பூர்வ கத்தோலிக்க பதிப்பு).
- 1983: தள்ளுபடியாகம (Apocrypha) நூல்களை உள்ளடக்கிய *ஓசானா வேதாகமம்*.
- 1997: சிரியாக் மொழியிலிருந்து மொழிபெயர்க்கப்பட்ட *பெஷிட்டா வேதாகமம் (Peshitta Bible)*.

நாம் வேறு எவ்விதத்திலும் கற்றுக் கொள்ள முடியாதவைகளைக் குறித்து பரிசுத்த வேதாகமம் நமக்குக் கூறுகிறது: நாம் எப்படிப்பட்டவர்கள், நாம் யார், நாம் எப்படி இங்கு வந்தோம், நாம் ஏன் இங்கு இருக்கிறோம், மற்றும் நாம் இங்கு இருக்கும்போது செய்ய வேண்டியது என்ன என்பன போன்ற பல விஷயங்களை வேதம் நமக்குக் கூறுகிறது. - A W டோசர்

### கேரளாவில் வேதாகமத்தின் தாக்கம்

### கேரளாவில் சீர்திருத்தம்

மார்ட்டின் லூதர் மற்றும் ஜான் கால்வின் போன்ற தலைவர்களின் கீழ் மேற்கத்திய நாடுகளில் சீர்திருத்தத்திற்கு ஆங்கிலத்தில் திறந்த வேதாகமம் (Open Bible) வழிவகுத்தது போலவே, மலையாளத்தில் திறந்த வேதாகமம் மலங்கரா சபையின் சீர்திருத்தத்தில் குறிப்பிடத்தக்க பங்கை வகித்தது.

சாதாரண விசுவாசிகள் தாங்களாகவே வேதத்தைப் படிக்கத் தொடங்கி, சபைக்குள் ஊடுருவியிருந்த வேதத்திற்கு மாறான நடைமுறைகளைக் கண்டுபிடித்தனர். இது ஆபிரகாம் மால்ப்பன் மற்றும் கைத்தயில் கீ வர்கீஸ் மால்ப்பன் போன்ற தலைவர்களால் தொடங்கப்பட்ட சீர்திருத்த முயற்சிகளைத் தீவிரப்படுத்தி, அதை ஒரு மக்கள் இயக்கமாக மாற்றியது. இது இறுதியில் மார் தோமா சபை, புனித தோமா எவாஞ்சலிக்கல் சபை மற்றும் கேரளாவில் உள்ள பல புராட்டஸ்டன்ட் பிரிவுகளின் உருவாக்கத்திற்கு வழிவகுத்தது.

### அச்சுத்துறையும் எழுத்து சீர்திருத்தமும்

பெய்லி (Bailey) இங்கிலாந்திலிருந்து ஒரு அச்சு இயந்திரத்தை இறக்குமதி செய்தார், ஆனால் அப்போது இருந்த மலையாள எழுத்துருக்கள் (fonts) அழகாக இல்லை எனக் கண்டார். உள்ளூர் கைவினைஞர்களின் உதவியுடன், அவர் வட்டமான மலையாள எழுத்துருக்களை உருவாக்கினார். இயந்திரக் கோளாறுகள் ஏற்பட்டபோது அவர் மரத்தினாலான ஒரு அச்சு இயந்திரத்தையும் உருவாக்கினார்.

இந்த முயற்சிகீழ்க்கண்டவைகளுக்கு வழிவகுத்தது:

- மலையாள அச்சுத்துறையின் வளர்ச்சி
- எழுத்து சீர்திருத்தம் (தேவைப்படும் எழுத்துருக்களின் எண்ணிக்கையைக் குறைத்தல்)
- மலையாள எழுத்து முறையின் தரப்படுத்தல்

### மலையாள மொழி மற்றும் இலக்கியத்தின் மீதான தாக்கம்

### வேதாகம மொழிபெயர்ப்பு:

- சொற்களஞ்சியத்தை வளப்படுத்தியது (கர்த்தர், சுவிசேஷம், இரட்சிப்பு, நித்திய ஜீவன், ஆசீர்வாதம், ஐக்கியம் போன்ற சொற்கள்)
- வாக்கிய அமைப்பில் தாக்கத்தை ஏற்படுத்தியது
- மரபுத்தொடர் வெளிப்பாடுகளை (idiomatic expressions) அறிமுகப்படுத்தியது (எ.கா., "நல்ல சமாரியன்," "ஆட்டுத்தோல் போர்த்திய ஓநாய்," "கல்லெறிதல்" என்பது வன்மையாக குற்றம் சாட்டுதல் என்ற பொருளில்)
- முன்பு மலையாள எழுத்தில் தரப்படுத்தப்படாதிருந்த நிறுத்தற்குறிகளை (காற்புள்ளி, முற்றுப்புள்ளி, அரைப்புள்ளி) அறிமுகப்படுத்தியது.
- குமரன் ஆசான், பாறப்புறத்து, எம்.பி. அப்பன், பெரும்படவம் ஸ்ரீதரன் மற்றும் சாரா ஜோசப் போன்ற எழுத்தாளர்களின் மீது குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தியது.

### முடிவுரை சிந்தனைகள்

வேதாகமம் ஒரு புதிய மொழியில் மொழிபெயர்க்கப்படும்போது, அந்த மக்கள் கூட்டத்திடையே ஒரு மாற்றம் ஏற்படும் என்று நாம் எதிர்பார்க்கலாம். அது உடனடியாக நிகழாமல் இருக்கலாம், ஆனால் காலப்போக்கில், மொழிபெயர்ப்பு மக்களை அவர்களின் தாய்மொழியில் சென்றடையும்போது, அவர்களுடைய வாழ்வில் ஒரு பெரிய மாற்றம் நிச்சயமாக நிகழும்.

மலையாள வேதாகமத்தை நமக்கு அருளியதற்காக நாம் தேவனைத் துதிப்போம். மேலும் உலகம் முழுவதும் நடைபெறும் வேதாகம மொழிபெயர்ப்பு ஊழியத்திற்காகவும் ஜெபிப்போம்.

**- (Dr. ஜேக்கப் சாமுவேல்)**

(வேதாகம மொழிபெயர்ப்பு பற்றி உங்களுக்கு ஏதேனும் கேள்விகள் இருந்தால் அனுப்புங்கள்...
அடுத்த மாத இதழில் இக்கட்டுரை ஆசிரியர் பதிலைப் பகிர்ந்துகொள்வார்)

## சாட்சி - சகோதரி. ஜெபசெல்வி. ★★★★★

**உங்கள் பெயர், ஊர், குடும்பம், கிறிஸ்தவ பின்னணி & வளர்ப்பு:**

கர்த்தருக்கு ஸ்தோத்திரம் . என் பெயர் ஜெபசெல்வி. GODependence குழுவின் மூலம் 2 மாத வேதவாசிப்பு திட்டத்தில் சேர்ந்து, முழு வேதாகமத்தையும் வாசித்து முடிக்க தேவன் அளித்த கிருபைக்காக கோடான கோடி நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

**நீங்கள் இதுவரை முழு பைபிளையும் எத்தனை முறை வாசித்திருக்கிறீர்கள்? அதில் எத்தனை முறை GODependence திட்டத்தின் மூலம்?**

ஒவ்வொரு முறையும் வேதாகமம் வாசிக்கும் போது பல புதிய அனுபவங்கள் கிடைத்தன. முதல் முறையாக வாசிக்கும் போது சில நேரம் உட்கார்ந்து வாசிப்பேன், சில நேரம் படுத்துக் கொண்டு வாசிப்பேன். எனக்கு ஸ்பைன் பிரச்சனை (Spine Bulge) இருந்ததால் அப்படிச் செய்தேன். ஆரம்பத்தில் கடமைக்காகவே வாசிக்கத் தொடங்கினேன்.

**GODependence திட்டத்தின் மூலம் வேதாகமம் வாசிக்க எப்படி ஆர்வமாக இருந்தது?**

அடுத்த முறையில் வாசிக்கும் போது தியானிக்கத் தொடங்கினேன். இப்போது நான் படுத்துக் கொண்டு வாசிப்பது இல்லை. **“நான் பிதாவானால் என் கண்ணியம் எங்கே?”** என்ற வசனத்தை நினைத்து, வசனங்களை வைத்து ஜெபிக்க ஆரம்பித்தேன். **“என்னை பலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய எனக்கு பலன் உண்டு”** என்ற வசனம் எனக்கு பலம் தந்தது.

**இப்போது உங்கள் வாழ்க்கையில் ஏற்பட்ட மாற்றங்கள்:**

இப்போது தேவன் எனக்கு ஊழியங்களுக்கு செல்ல கிருபை செய்கிறார். என் குடும்பத்தையும் தேவன் பாதுகாத்து வழிநடத்துகிறார்.

**GODependence குழுவின் முறை உங்களுக்கு எவ்வாறு உதவியது?**

வேதாகமம் வாசிக்கும் போது புரியாத வார்த்தைகள் இருந்தால் உடனே வாட்ஸ்அப்பில் அனுப்புவேன். அவர்கள் உடனடியாக விளக்கம் அளித்து உதவுவார்கள்.

**இறுதியாக, சில வரிகளில் நீங்கள் என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?**

முதலில் என் தேவாதி தேவனுக்கு ஸ்தோத்திரத்தோடு நன்றி செலுத்துகிறேன். GODependence குழுவில் பணிபுரியும் சகோதரர்களுக்கும் சகோதரிகளுக்கும் என் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

# GODependence நிகழ்வுகள்

## 1

## தொடர் வேதவாசிப்பு நிகழ்ச்சி (Bible Readathon) - 25.05.2026 தெலுங்கு மொழியில்




கடந்த மாதத்திற்கான Bible Readathon 28 மார்ச் 2026 அன்று மாலை இந்திய நேரம் மாலை 6 மணி முதல் இரவு 10 மணி வரை மலையாள மொழியில் சிறப்பாக நடைபெற்றது.

இந்த மாதத்திற்கான Bible Readathon 25 ஏப்ரல் 2026 சனிக்கிழமை அன்று இந்திய நேரம் மதியம் 2 மணி முதல் மாலி 6 மணி வரை **தெலுங்கு மொழியில்** நடைபெற உள்ளது.

நல்ல இணைய (Internet) வசதியும் தெலுங்கு மொழியில் சரளமாக வேதாகமம் வாசிப்பவர்களும் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்ள அழைக்கிறோம்.

## 2




## GODependence கருத்தரங்கு - மார்ச் 2026

**தலைப்பு:** **வேதாகமத்தை தியானித்தல்: ஏன், எப்போது, எப்படி**

(தேவனுடைய வார்த்தையாகிய வேதாகமத்தை தியானிப்பதன் நோக்கம், நடைமுறை, மற்றும் வல்லமையை ஆராயும் நுண்ணறிவும் கலந்துரையாடலும் கொண்ட ஒரு அமர்வு. பங்கேற்பவர்கள் ஆவிக்குரிய மாற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் வேதாகமத் தியானத்தின் அவசியத்தைப் புரிந்துகொண்டு, தேவனுடைய வார்த்தையுடன் அர்த்தமுள்ள விதத்தில் எவ்வாறு திறம்பட ஈடுபடுவது என்பதைக் கற்றுக்கொள்வர்.)

**நாள்:** **25 மார்ச் 2026 சனிக்கிழமை இந்திய நேரம் இரவு 7:00 முதல் 8:15 மணி வரை**


**கருத்துரை:** **சகோ. அற்புதராஜ் சாமுவேல், பெங்களூரு.**

## 3

## வேத தியான குழுக்கள் (BMG) - பயிற்சி அமர்வுகள் - மே 2026

25 ஏப்ரல் 2026 அன்று நடைபெற இருக்கும் GODependence கருத்தரங்கு வேதாகம தியானத்தை மையமாகக் கொண்டுள்ளது.

வேத தியானக் குழுக்களில் இணைய விரும்புபவர்களுக்கான இன்னும் கூடுதலான பயிற்சி நிகழவுகள் மே 2026 மாதத்தில் நடைபெற உள்ளன. அவை குறித்த விபரங்கள் வேதவாசிப்பு சவால் குழுக்களில் மற்றும் அடுத்தமாத செய்திமடலில் பகிரப்படும்.



FOLLOW US!

GODependence **வேதவாசிப்பு சவால்கள்**

+965 6596 2559

GODependence - தமிழ் (Instagram)

GODependence - தமிழ் (YouTube)

GODependence (Website)

GODependence - தமிழ் (Facebook)

X GODependence

தொடர்பு முகவரி:
**GODependence**
105 Y/1A, நல்ல சமாரியன் நகர்,
வள்ளியூர் - 627117,
தமிழ்நாடு, இந்தியா.

பரிசுத்த வேதாகமத்தில் உள்ள ஒரு வசனமானது நான் வாசித்த எல்லா புத்தகங்களைக் காட்டிலும் அதிகமாக எனக்கு மிகுந்த ஆறுதலைத் தந்தது. - இம்மானுவேல் காண்ட்